Registered with the Registrar of NewsPapers for India R. No. 62828 / 95

| Date of Publication : 1st of Every month | Date of Posting : 5th & 6th of Every month |
|---|---|
| Regd. No. TN / CC (S) DN / 119 / 12-14 | Licensed to Post without Prepayment WPP No. TN/PMG(CCR)/WPP-608/12-14 |

| வேணு : 19 | அக்டோபர் 2013 | கானம் : 3 |
|---|---|---|





Published by S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No.2, Old No.24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600083 and Printed by Mr.R.Kumaravel of Raj Thilak Printers (P) Ltd, 1/545A, Sivakasi Co-Op Society Industrial Estate, Sivakasi. Editor: S.Sridhar

Related Websites : www.namadwaar.org Email:contact@namadwaar.org




Please Subcribe to Madhuramurali




Please Subcribe to Madhuramurali



செப்டம்பர் 9 – கடலூர் மஞ்சக்குப்பம்
செல்வ விநாயகர் கோவில் கும்பாபிஷேகம்



செப்டம்பர் 21 – கர்நாடக சம்பிகெரே கிராமத்தில் அகண்ட நாமகீர்த்தன பூர்த்தி



செப்டம்பர் 1 - மலேசியாவில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் அருளிய
"கர்த்தவர்கள்" புத்தகம் வெளியீடு. மலேசிய இந்து சங்க
தேசிய தலைவர் டத்தோ ஸ்ரீமோகன்ஷான் மற்றும்
பொது செயலாளர் ஸ்ரீகணேஷ்பாபு அவர்களுடன் பாக்யநாதன்ஜி



மலேசிய சுதந்திர தினம் – ஆகஸ்டு 31
ஷா ஆலாமில் மலேசிய நாமத்வார் சார்பாக இலவச மருத்துவ முகாம்

Please Subcribe to Madhuramurali



செப்டம்பர் 16, 2013 – வாசவி மஹால், பெரியகுளத்தில் முரளீஜி முன்னிலையில் மஹாமந்த்ர கூட்டு ப்ரார்த்தனை

செப்டம்பர் 13-15, 2013 – பெரியகுளம் நாமத்வாரில் சத்சங்கம் – முரளீஜி





செப்டம்பர் 7, 2013 – தூத்துக்குடி நாமத்வாரில் புராதன போட்டி





ஆக 31, செப் 1, 2013 – பாக்யநாதன்ஜி முன்னிலையில் மலேசிய நாமத்வாரின் இரண்டாமாண்டு விழா



செப்டம்பர் 2013 – மத்திய கிழக்காசிய நாடுகளில் ஸ்ரீமத் பாகவத உபன்யாசம், சத்சங்கம் – ராமானுஜம்ஜி

September 2013 - Leadership Programme in Middle East - Ramanujamji





Please Subcribe to Madhuramurali

ஸ்ரீ ஹரி:

மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

வேணு: 19 | அக்டோபர் 2013 | கானம்: 3

**ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே**
**ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே**

**இந்த இதழில் ...**


| | | | |
|---|---|---|---|
| மதுரமான மஹனீயர் - 211 | 03 | ஸ்வாமி ராமகிருஷ்ணானந்தர் | 28 |
| ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள் | 12 | பாலகர்களுக்கு ஒரு கதை | 33 |
| பாகவதபழம் -ஸ்கந்தம்2 -ப5 | 16 | பிருந்தாவனமும் நந்தகுமாரனும் | 38 |
| தேரைக்கு உணவு | 19 | மாலே மணிவண்ணா | 40 |
| மஹான்களின் பதில் | 25 | அப்பாலுக்கு அப்பால் | 42 |


**கேள்வி: எந்த ஜோதியால் நீ உலகை காண்கின்றாய்?**
**பதில்: பகலில் சூரியன், இரவில் தீபம் முதலியவற்றால் காண்கின்றேன்.**
**கேள்வி: சூரியன் முதலியவற்றை விளக்கும் ஜ்யோதிஸ் எது?**
**பதில்: கண்**
**கேள்வி: கண் மூடியிருந்தால்?**
**பதில்; புத்தியை கொண்டு காண்கின்றேன்.**
**கேள்வி: அந்த புத்தி மூலமாக காண்பிப்பது எது?**
**பதில்: "நான்" என்பது!**
**ஆதலால் "நான்" எனக் கூறும் நீதான் ஜ்யோதிஸ். அதே ஆத்மா. அதுதான் எல்லாவற்றையும் விளக்கும் ஜ்யோதிஸ் ஆகும்.**

**- ஆதிசங்கரர்**

Please Subcribe to Madhuramurali

## ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் கீர்த்தனம்

**ராகம் : செஞ்சுருட்டி** **தாளம் : ஆதி**

**பல்லவி**

**தொட்டு விட நினைக்குது என் மனது - உனை**
**வேங்கடவா ...... - அது**
**கிட்டி முட்டி பார்க்குது - உந்தனை அது** (தொட்டு ..)

**அனுபல்லவி**


**விட்டு விட்டு நினைக்குது உந்தனை - அது**
**பட்டும் படாமலே இருக்குது** (தொட்டு ..)

**சரணம்**

**சுட்டித்தனம் அதற்கில்லை உனையறிய**
**தொட்டுக் காட்ட அங்கு ஒருவரும் இல்லை**
**கட்டித் தங்கமே என் கற்கண்டே**
**விட்டிடாமல் எனையும் கரை சேர்த்திடுவாய்**

(தொட்டு ..)

முன் அட்டை :
ஆகஸ்டு 30 – செப் 6
மதுரபுரி ஆஸ்ரமம் –
ப்ரும்மோத்ஸவத்தில்
திவ்யநாமம்
பின் அட்டை :
விடையாற்றி மற்றும்
ஆஞ்சநேய உற்சவம்





Please Subcribe to Madhuramurali

# மதுரமான மஹனீயர் - 211

டாக்டர்.ஆ.பாக்யநாதன்

"பன்னரும் வேதங்கள் படித்து உணர்ந்தாலும் உன்னருள் இல்லாவிட்டால் ஒன்றுக்கும் உதவாது" - என்பது மகான் ஊத்துக்காடு வெங்கட கவியின் வாக்கு. பல கலைகளில் தேர்ச்சி பெற்றிருந்தாலும், பல நூல் கற்று இருந்தாலும், மேதாவியாக இருந்தாலும், குருவின் அருள் இல்லாவிடில் அது பரிமளிக்காது. குருவின் அருள் இருந்துவிட்டாலோ, இவை அனைத்தும் இல்லாவிடினும், சிறிதும் கவலை இல்லை. வாழ்க்கையில் வசந்தமான தென்றலின் சிலுசிலுப்பிற்கு குறைவே இராது. நம்மிடம் பல குறைகள் இருக்கையில், நம்மை ஆட்கொள்ள வருபவர்தான் அன்னை போன்ற குருநாதர். குருவும் கோவிந்தனும் என் முன் வந்தால், குருவையே முதலில் சேவிப்பேன் என்கிறார் அல்லவா கபீர்தாசர்! வாழ்க்கையின் சில தருணங்களில் நாம் என்ன செய்வது என்று தெரியாமல், தத்தளிக்கையில், அபயம் தருபவர்தான் குருநாதர். அபயம் தருவதோடு மட்டுமின்றி, நம் கவலைகளை எல்லாம் மொத்தமாக தானே ஏற்று கொண்டு, சாந்தி தருபவராக இருக்கிறார். உத்தம குருவிடம் வந்து சரணடையும் ஒவ்வொரு ஜீவனின் அனுபவமும் இப்படித்தான் இருக்கும். அப்படி குருநாதரின் திருவடிகளில், தம்மை ஒப்படைத்து வாழ்பவர்களில் ஒருவர்தான், தஞ்சாவூரை சேர்ந்த திரு.ராஜகோபால் ஆவார்.

தஞ்சாவூர் ராஜகோபால், காஞ்சி மஹாஸ்வாமிகளிடம் மிகவும் ஈடுபாடும் பிரியமும் கொண்ட பக்தர் ஆவார். மஹாஸ்வாமிகள் சித்தியானதற்கு பின்னர், அவருக்கு வாழ்வில் ஒரு வெறுமை ஏற்பட்டது. இறை சிந்தனையில் காலம் கழிக்க வேண்டும் என்பதற்காக வேலையை ராஜினாமா செய்து விட்டார்.

2002இன் கடைசியில் கடவுள் அருளால், ராஜகோபால் அவர்களுக்கு ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் தொலைக்காட்சி


Please Subcribe to Madhuramurali

அருளுரைகளை, தொடர்ந்து கேட்டு வரும் வாய்ப்பு அமைந்தது. ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் அருளிய பக்த சரித்திரங்களும், அமுத மொழிகளும் அவர் மனதில் நீங்கா இடம் பெற்று வர ஆரம்பித்தது. தினம் தினம் அதை பார்த்து வந்த அவருக்கு, இப்படிப்பட்டவரை நேரில் தரிசிக்க வேண்டும் என்று கட்டுக்கடங்காத ஆர்வம் வர ஆரம்பித்தது. ஆனாலும், குருநாதரை பற்றிய விவரங்கள் எதுவும் அவருக்கு கிடைக்கவில்லை.

ஒருசமயம், அவரது நண்பர் திரு.கணபதி சுப்ரமணியன், "ஒரு வேலையாக சென்னை செல்ல உள்ளேன்" என, அவரிடம், தமது ஆவலை எடுத்து சொல்லி, எப்படியாவது ஸ்ரீஸ்வாமிஜியின் முகவரியை தெரிந்து வருமாறு சொல்லி இருக்கிறார். அவரது நண்பராலும் சென்னையில் ஸ்ரீஸ்வாமிஜியின் முகவரியை கண்டுபிடிக்க இயலவில்லை. ஆனால் உண்மையாக நாம் ஒன்றை ஆசைப்பட்டால், அதை கடவுள் எப்படியாவது நிறைவேற்றி வைப்பார் அல்லவா? அப்படித்தான், திரு.ராஜகோபால் அவர்களது விருப்பத்தை, ஸ்ரீஸ்வாமிஜி அவர்களே பூர்த்தி செய்து வைக்க முடிவு செய்தாற்போல் மேற்கொண்டு நிகழ்ந்தது.

நண்பர், குரோம்பேட்டையில் உள்ள தம் உறவினரின் வீட்டிற்கு சென்றிருக்கிறார். அங்கு மதுரமுரளியின் பழைய இதழ் ஒன்றும், அதில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் திருவுருவப்படமும் அவர் கண்ணில் பட்டு இருக்கிறது. அதைப்பார்த்து திரு.கணபதி சுப்ரமணியன், "அடடா! இவரை பார்க்கத்தானே நண்பர் ராஜகோபால் மிகவும் ஆசைப்படுகிறார்" என்றபடி, அவர்களிடம், ஸ்ரீஸ்வாமிஜியை பற்றிய விவரங்களையும், எனது ஈமெயில் முகவரியையும் வாங்கி ராஜகோபாலிடம் கொடுத்தார்.

பிறர் கண்ணில் பட வேண்டும் என்பதற்காக, நாம் ஒன்றை வைத்தால் அது நமக்குத்தான் தெரியும். அப்படி இறைவனே இவர் கண்களில் பட வேண்டுமென்று, தானே மதுரமுரளியை வைத்தான் போலும்! ஸ்ரீஸ்வாமிஜி அவர்களை தரிசிக்க வேண்டும் என்ற தமது ஆசையை நண்பரிடம் சொல்ல தூண்டியதும் இறையருள்தானே. இதை பார்க்கையில், "அவனருளாலே அவன் தாள் வணங்கி" என மாணிக்கவாசகர் சொல்வது நம் நினைவுக்கு வருகிறது.


Please Subcribe to Madhuramurali

அதன்பின், என்னை ஈ‌மெயிலில் தொடர்பு கொண்ட திரு.ராஜகோபால், தாம் ஒரு ஓய்வு பெற்ற வங்கி அதிகாரி என்றும் ஸ்ரீஸ்வாமிஜியின் உபன்யாசங்கள் தமக்கு சொல்ல முடியாத மன அமைதியை தந்து வருவதாகவும், ஸ்ரீஸ்வாமிஜியின் தரிசனம் பெற மிகவும் ஆர்வமுடன் இருப்பதாகவும் அதில் குறிப்பிட்டு இருந்தார். மேலும் தான் சென்னைக்கு வர இருக்கும் நாட்களையும் குறிப்பிட்டு, அவற்றில் ஏதாவது ஒரு நாளில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களை வந்து தரிசிக்க விரும்புவதாகவும் தெரிவித்து இருந்தார். இந்த விவரங்களை, ஸ்ரீஸ்வாமிஜி அவர்களிடம் தெரிவித்திருந்தேன். ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் மறுநாளே, திரு.ராஜகோபால் குறிப்பிட்டிருந்த தேதிகளில் ஒன்றை சொல்லி, அன்று ஆஸ்ரமம் வரும்படி தெரிவிக்கச் சொன்னார்கள்.

எப்பொழுதுமே, ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், எதை கேட்டு கொண்டாலும் அல்லது எதை தெரிவித்தாலும் தெளிவாக அதை செய்து விடுவார்கள். சமயத்தில் நமக்கு புரியவில்லை என்றால் முத்து முத்தாக எழுதியே கொடுத்தும் விடுவார்கள். எனக்கு இதில் பல விதத்திலும் நல்ல அனுபவம் உண்டு. ராஜகோபாலுக்கும் ஆஸ்ரமம் வரும் வழி, பேருந்து, அதன் மார்க்கம், போன்ற முழு விவரங்களையும் எழுத சொல்லி இருந்தார்கள். நானும் அவற்றை விரிவாக தெரிவித்து இருந்தேன். இது நடந்தது 2002, டிசம்பர் 30 ஆகும். திரு.ராஜகோபாலை வர சொன்ன தேதி பிப்ரவரி 6, 2003.

ஆஸ்ரமமிருக்கும் ஊர் சென்னை அருகே என்றவுடன், ராஜகோபால், பெரிய இடம் என்று நினைத்து இருக்கிறார். குறிப்பிட்ட நாளன்று மலைப்பட்டு வந்து இறங்கி பார்த்தால், அது ஒரு கிராமம். குடியிருப்புகள் பல இல்லை. தயங்கியபடி கிராமவாசி ஒருவரிடம், ஸ்ரீஸ்வாமிஜியின் ஆஸ்ரமம் குறித்து விவரம் கேட்க, அவர், "கிராமத்தினுள் கொஞ்சம் நடந்தால் ஆஸ்ரமம் வரும்" என்று சொல்லவே, உள்ளே வந்த ராஜகோபால், ஆஸ்ரமத்தையும் மலையையும் அதன் சூழலையும் கண்டு, மயங்கி விட்டார். அப்பொழுது, ஸ்ரீஸ்வாமிஜி, ஸ்ரீகல்யாண ஸ்ரீனிவாச பெருமாள் கோவிலில் தெற்குப்பக்கம் ஒரு தூணருகே தீர்த்தபிரசாதம் கொடுத்தவாறு இருந்தார்கள். ராஜகோபாலும் பிரசாதம் பெற கியூவில் நின்றார். அவர் முறை வருமுன்னரே, ஸ்ரீஸ்வாமிஜி அவரை நன்கு கூர்ந்து பார்த்தபடியே இருந்திருக்கிறார்கள்.


Please Subcribe to Madhuramurali

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் பார்வையில், கனிவும், வெகு நாட்கள் பழகிய ஒரு உரிமையான அன்பும் இருப்பதை புதிதானவர்கள் கூட அறிந்து விடுவார்கள்.

இவர் மரியாதையுடனும் பக்தியுடனும் அணுகி, "தஞ்சாவூரிலிருந்து ...." என்று சொல்லும் முன், ஸ்ரீஸ்வாமிஜி அவர்களே முந்திக்கொண்டு, "நீங்கள் தஞ்சாவூர் ராஜகோபால்தானே. இங்கு என் பக்கம் நில்லுங்கள்" என்று அவரருகில் இருக்க சொல்லிவிட்டார். மிகவும் சந்தோஷமுடன் அவரும் அருகில் நின்று விட்டார். மஹான்களின் தரிசனமும் ஒரு அமுதம் என்பது, அனைவரும் உணரும் ஒன்றுதானே!

அன்று வசந்த பஞ்சமி. ஸ்ரீகல்யாண ஸ்ரீனிவாச பெருமாளின் முதல் வருட பிரதிஷ்டா தினமும் கூட. அந்த விசேஷ தினத்தில், ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் தரிசனம் ராஜகோபாலுக்கு கிடைத்தது. குருவின் பிரதம தரிசனம் பெறும் தினம்தான் ஒருவர் பிறந்த தினம் என்பார் குருநாதர். திரு.ராஜகோபாலும் தாம் பிறந்த தினம் அதுவே என்பார். மேலும் பிரதிவருடம் அன்றைய தினம் குருநாதரை தரிசிப்பதை, தமது வழக்கமாகவும் கொண்டவர் ராஜகோபால். அன்று, சந்த் ஏகநாதர் ஹாலில் இருந்த பஜனையில் கலந்து கொண்டு, ஸ்ரீஸ்வாமிஜி மாலை 4மணிக்கு அழகான உபன்யாசம் ஒன்றை அருளினார்கள். பின்னர் ராஜகோபாலிடம் அவரை பற்றிய முழு விவரங்களையும் கேட்டு அறிந்தார்கள். நம் மனதை யாரிடமாவது பறி கொடுத்தால், "எங்கள் இல்லம் வாருங்களேன், எங்கள் ஊர் வாருங்களேன்" என்று அழைப்போம். ஸ்ரீஸ்வாமிஜியை தரிசித்த இன்ப நிலை விலகா முன்னரே, ராஜகோபால், தஞ்சாவூருக்கு வந்து அருளுரை வழங்க வேண்டும் என்று ஸ்ரீஸ்வாமிஜியிடம் பிரார்த்தித்து கொண்டார். ஸ்ரீஸ்வாமிஜி அவர்களும் அதை ஏற்றுக்கொண்டு, தஞ்சாவூரில் ஸ்டேட் பேங்க் பிள்ளையார் கோவிலில் அவ்வருடமே, மே 28 முதல் ஜூன் 2 வரையிலுமாக வந்து, அருளுரையும் வழங்கினார்கள்.

மழை வேண்டிய ஒருவன் மழை வந்தால் குதூகலப்படுவான். ஆனால் அப்படி வரும் மழையினால் அனைவருக்கும் பிரயோஜனம். மழையை கவனிக்காதவரையும் கூட அது, குளிர செய்து விட்டு போய் விடுகிறது. அப்படித்தான் மஹான்கள் உலகில் பழகுகையில், அவர்களால் அனைவருக்கும்


Please Subcribe to Madhuramurali

நன்மை. இறைவனின் அருளால்தான் சத்குருவின் தரிசனத்தை ஒருவர் பெறுகிறார் என்பது சர்வ நிச்சயம். ஆனால் நடைமுறையில் பார்த்தால், குருநாதரின் அருளானது, மழையை போல், பலரை சென்றடைய ஒருவரின் பிரார்த்தனை காரணமாக அமைகிறதல்லவா! மஹான்களுக்கு உலகில் ஆக வேண்டியது ஒன்றும் இல்லை எனினும், தங்களை அண்டுவோருக்கு கருணையை, மழை போலவே, பொழிகிறார்கள். அப்படியே, ராஜகோபாலின் பிரார்த்தனைதான், இன்று தஞ்சையில் பலருக்கு குருநாதர் அனுக்ரஹம் கிடைக்க காரணமாய் அமைந்து இருக்கிறது.

குருவின் அருள் என்பது, கஷ்ட காலத்தில் தானாகவே தேடி வந்து அருளும் தன்மை கொண்டதாகும். ராஜகோபாலின் மேல் சகல விதங்களிலும், ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் கருணை மழை பொழிந்து வந்தார்கள். 2003இல் ராஜகோபாலது மனைவிக்கு, மூளையில் நரம்பு சம்பந்தமான அறுவை சிகிச்சை ஒன்று செய்ய வேண்டி வந்தது. குருநாதரின் அருளால், அது வெற்றிகரமாக நடந்து முடிந்தது. 2004இல் ராஜகோபாலுக்கே ஸ்பைனல்கார்டில் ஏற்பட்ட குறைபாட்டினால், இடது கால் செயலிழக்கும் நிலை ஏற் பட்டது. ஸ்ரீஸ்வாமிஜி அதை கேள்விப்பட்டு, திரு.பம்மல் பாலாஜி மூலம் பிரசாதங்களை கொடுத்து அனுப்பினார். பின்னர் ஒரு பெரிய அறுவை சிகிச்சைக்கு பின், ராஜகோபால் முழுமையாக தேறினார். இப்பொழுது முன்போல் அவரால் செயல்பட முடிகிறது.

ராஜகோபால் அவர்களுக்கு விமலா என்றொரு தங்கை உண்டு. பிறவியில் உடல் ஊனம் கொண்டவராதலால் பிறரை போல நடமாட முடியாதவர். ராஜகோபாலுடனேயே வாழ்ந்து வருகிறார். உடல்தான் ஊனமே ஒழிய, உள்ளம் தூய்மையானவர். குருநாதரிடம் மிக்க பிரியமும் பக்தியும் கொண்டவர். ஒரு அன்னைக்கு பல குழந்தைகள் இருப்பினும், தன்னருகில் இருக்கும் குழந்தைகளை விட தன்னை வந்து பார்க்க இயலாத குழந்தையிடமே, அவள் எண்ணம் அதிகமிருக்கும் என்பார் குருநாதர். குருநாதரை நேரில் வந்து தரிசிக்க முடியாமல், வெகு தூரங்களில், அவர்பால் அன்பு பூண்டு வசித்து வரும் அன்பர்களை எப்பொழுதும், குருநாதர் ஸ்மரிப்பதை நானே பன்முறை கண்டிருக்கிறேன். அதுபோல், தஞ்சாவூருக்கு குருநாதர் சென்றால்


Please Subcribe to Madhuramurali

அவரை தரிசிக்க ஆயிரத்துக்கு மேற்பட்டோர் காத்து இருப்பர். அவர்களை போல் விமலாவால் வர முடியாது. இருப்பினும் குருநாதரோ, தாமே ராஜகோபாலின் வீட்டை தேடி சென்று, விமலாவிற்கு தன் தரிசனம் தந்து, தமது அமுத வசனங்களால் அனுக்ரஹித்து விட்டுத்தான் வருவார். இது, குருநாதரிடம் காணப்படும் அழகான குணாதிசயங்களில் ஒன்று.

மஸ்கட்டில் வசிக்கும் ராஜகோபால் அவர்களின் 2வது பெண் ரஞ்சனிக்கு திருமணமாகி, ஆறு வருடமாகியும் குழந்தை பாக்யம் இல்லாமல் இருந்தது. ஸ்ரீஸ்வாமிஜியிடம் அவர்கள் தம்பதி சகிதமாக வந்து, 2003இல் பிரார்த்தித்து கொள்ள, மறு வருடமே அக்ஷயதிருதியையன்று அழகான குழந்தை பிறந்தது. ஸ்ரீ ஸ்வாமிஜி குழந்தைக்கு அக்ஷய் என்று பெயரிட்டார்கள். குழந்தை பிறந்து ஆறு மாதம் கழித்து, ரஞ்சனி மஸ்கட் திரும்ப வேண்டும். அது, ஸ்ரீஸ்வாமிஜி மாதக்கணக்கில் தனிமையிலிருந்து, எவரையும் சந்திக்காமல், ஜப, தியானங்களில் ஈடுபட்டுக்கொண்டு இருந்த சமயம். அவரது தரிசனம் மிகவும் அரிதாக இருந்தது.

இருப்பினும் ஸ்ரீஸ்வாமிஜியிடம் குழந்தையை காண்பித்து அருளாசி பெற்ற பின்னரே, மஸ்கட் செல்வது என்று மிக உறுதியாக இருந்தார் ரஞ்சனி. ஸ்ரீஸ்வாமிஜி அவர்களும் கருணையுடன் தம் தரிசனத்தை அவருக்கு வழங்கியதோடன்றி, குழந்தையை தமது திருக்கரங்களில் வாங்கி, வெகுவாக ஆசீர்வதிக்கவும் செய்தார்கள். அன்பர்களின் விருப்பத்தில் மகிழும் குருநாதர், ராஜகோபாலின் சஷ்டியப்த பூர்த்தியையும், குழந்தையின் அப்தபூர்த்தியையும் கூட, தம் முன்னிலையில் பின்னர் நடைபெற அருளினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இன்று ராஜகோபாலது மாப்பிள்ளை ஸ்ரீசந்திரசேகர் - ஸ்ரீமதி ரஞ்சனி தம்பதியினர், மஹாமந்திர கீர்த்தனத்துடன் மஸ்கட்டில் சத்சங்கத்தில் ஈடுபட்டு வருகின்றனர். குருநாதரின் மனதில் இடம் கிடைத்தால், அருள் அக்ஷயமாக அல்லவா ஆகி விடுகிறது!

ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், "கடிதம் எழுதுவது போன்று சிறு காரியம் என்றாலும், அல்லது முக்கிய வேலை ஒன்றை துவக்குவது என்றாலும், பகவானையும் குருநாதரையும் மனதால் நினைத்து, வணங்கியே செய்ய வேண்டும். இறைவனின் துணையுடன் செய்யப்படும், காரியங்கள் சுபமாய் முடியும்; மேலும் தடைகளே


Please Subcribe to Madhuramurali

வராது" என்று சொல்வார்கள். ராஜகோபாலும் எப்பொழுதும் குருநாதரை மனதில் வணங்கி விட்டே, எந்த ஒரு விஷயத்தையும் செய்வார். அவர் ஒருமுறை தஞ்சை ஸ்டேட் பாங்க் காலனி பிள்ளையார் கோவில் கும்பாபிஷேகம் நன்கு நடைபெற வேண்டும் என குருநாதரை பிரார்த்தித்து கொண்டார். குருநாதரும் நன்கு நடைபெறும் என்று அருளினார்கள். அப்பொழுது கோவிலில், ஸ்ரீசட்டநாத பாகவதரின் பஜனை, ராதாகல்யாணம் ஏற்பாடு ஆகி இருந்தது.

ராதாகல்யாணத்தில் கும்பாபிஷேகத்திற்காக ரூ5000 வசூல் ஆகியது. மறுநாள் காலை அதை கும்பாபிஷேக கமிட்டி தலைவர் திரு.குஞ்சிதபாதத்திடம் கொடுக்க, ராஜகோபால் சென்றார். அவரிடம் விஷயத்தை சொல்ல சொல்லவே, அதைக்கேட்டு குஞ்சிதபாதம் திகைத்துப்போய் விட்டார். அப்பொழுது குஞ்சிதபாதத்தின் மகள் "இன்று காலைதான் அப்பா தனக்கு ஒரு திவ்ய கனவு வந்தது என சொல்லி கொண்டிருந்தார். அதில் குருநாதர் தோன்றி, 5000ரூபாய் தந்து கும்பாபிஷேகத்திற்கு வைத்து கொள்ளவும். நன்கு நடக்கும் என்று அருளி இருக்கிறார்கள். நீங்களும் காலையிலேயே வந்து, சரியாக 5000 கொடுக்கிறேன் என்கிறீர்கள். இது குருநாதர் அருளுவதுதானே? அதுதான் அப்பா திகைத்து இருக்கிறார்" என்றார்!

தம் உடல் தேறிய பின், ராஜகோபாலின் மனைவி தினமும், ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருளாணைப்படி பாகவத பாராயணமும் மஹாமந்திர கீர்த்தனமும் செய்து வந்தார். 2009இல் ஸ்ரீமத்பாகவத சப்தாஹத்தை, ஸ்ரீஸ்வாமிஜி தஞ்சாவூரில் ராஜகோபால் மூலம் ஏற்பாடு செய்திருந்தார்கள். ஸ்ரீஸ்வாமிஜி அவர்களே முன்னிருந்து பாராயணமும், மாலையில் ஸ்ரீநவநீத கிருஷ்ணன் கோவிலில் உபன்யாசமும் செய்தார்கள். தம் மனைவி தினமும் பாராயணத்தில் பங்கு கொண்டாலும், ராஜகோபால் அவர்களுக்கு பாகவதம் படித்து பழக்கம் இல்லை என்பதால், பாராயணத்தில் பங்கு கொள்ளவில்லை. ஸ்ரீஸ்வாமிஜி அவர்களோ பூர்த்தியன்று, ராஜகோபாலிடம் "ஏன் பாராயணத்தில் பங்கு கொள்ளவில்லை" என்று பரிவுடன் வினவி, தாம் பாராயணம் செய்து வந்த புத்தகத்தையும் தந்து படிக்க சொன்னார்கள். சமஸ்கிருதம் தெரிந்து இருந்தாலும் அதை படிக்க கொஞ்சம்


Please Subcribe to Madhuramurali

சிரமப்பட்ட ராஜகோபாலை, தினமும் பாராயணம் செய்து வரவும் அருளினார்கள்.

பிரபஞ்சமானது மஹான்கள் சொல்லுக்கு கட்டுப்பட்டது. பிரபஞ்சத்தின் ஒரு சிறு பகுதிதானே நாமெல்லோரும்! பாகவத சப்தாஹம் தஞ்சாவூரில் முடிந்து, ஒரு வாரம் கழித்து, ராஜகோபால் ஆலங்குடிக்கு சென்றிருந்தார். தம் உறவினர் ஒருவரை பார்த்து விட்டு, அப்படியே ஆலங்குடி பெரியவர்களின் அதிஷ்டானத்தை தரிசிக்கவும் சென்று இருந்தார். 95 வயதாகிய அவரது உறவினரும் பாகவத பாராயணம், மிக நன்றாக செய்து வந்தவர். தஞ்சாவூர் சப்தாஹம் நன்றாக நடைபெற்றதையும், ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் முழுமையாக அதில் கலந்து கொண்டதையும் கேள்விப்பட்டு அந்த வயதான அம்மையார், "மாப்பிள்ளை! எனக்கு கண் சரியாக தெரியவில்லை. நான் எனது ராமாயண புஸ்தகத்தை மடத்தில் கொடுத்து விட்டேன். எனது பாகவத புஸ்தகத்தை உங்களுக்கு தருகிறேன். உங்களுக்குத்தான் சமஸ்கிருதம் தெரியுமே. தினமும் வாசியுங்கள்" என்று தம் ஆசையை தெரிவித்தார். குருநாதர் சொல்வதையே அவரும் சொன்னார். அல்லது குருநாதரே அப்படி பேசினாரோ என்னவோ?

அதைக்கேட்டு, ராஜகோபால் மிகவும் வியப்படைந்தார். ஏனெனில் குருநாதர், அப்பொழுதுதானே பாராயணம் செய்து வர சொல்லி இருந்தார். குரு சொல்வதையே எல்லோரும் சொல்கின்றனரே! பிரபஞ்சம் குருவை பிரதிபலிக்கிறது. சந்தோஷமாக ராஜகோபாலும் ஆலங்குடி பெரியவர்களின் சன்னதியில் அமர்ந்து, பாகவத பாராயணம் செய்ய ஆரம்பித்தார். ஆனாலும் பாராயணம் செய்வதில், தடங்கல் இருந்தது. பிழை இல்லாமல், சொற்களை சேர்த்தும் பிரித்தும் படிப்பதில் அவர் மிகவும் சிரமப்பட்டார். அவரது நண்பர் ஒருவர், "கஷ்டத்தை பார்க்காமல் குருநாதர் சொன்னபடி பாராயணம் செய்து வாருங்கள்" என்று சொல்லி ஊக்கப்படுத்தினார். இதுவும் குருவின் செயலே. ஒரு வாரம் கழித்து ஒருவர் அவர் வீட்டுக்கு வந்து "நீங்கள்தானே ராஜகோபால்" என்று கேட்டு, மேலும், "என் பெயர் கஸ்தூரி ரங்கன். பக்கத்து தெருவில்தான் வசித்து வருகிறேன். உங்கள் நண்பர் என் வீட்டு வாத்யாரிடம், உங்கள் பாராயண சிரமங்களை சொல்லியது என் காதில் விழுந்தது. லால்குடியில்


Please Subcribe to Madhuramurali

சமஸ்கிருத ஆசிரியர் ஆக பணியாற்றிய நான், இப்பொழுது ஓய்வு பெற்று விட்டேன். உங்களுக்கு நானே பாகவதம் படிக்க கற்று தருகிறேன்" என்றாரே பார்க்கலாம். ராஜகோபாலும் குருநாதரே அவரை அனுப்பி இருப்பதாக நினைத்து நல்ல நாள் ஒன்றில் ஆரம்பிக்கலாம் என்றார். ஆமாம்! பின்னே எப்படி நினைப்பார். பாகவதம் படிக்க முடியாததால், பழம் நழுவுகிறதே என்றுதான் தோன்றும். ஆனால் அது நழுவி பாலில் விழுந்தால் எப்படி இருக்கும்? மற்றும் ஒன்றை பார்க்க வேண்டும். குருவின் உபதேசமானது ஒருவரை தொடர்ந்தவாறே இருக்கும் என்று குருநாதர் சொல்வதுண்டு அல்லவா!

நல்ல நாளில் ஆரம்பிக்கலாம் என்றவரிடம், வந்திருந்த ஆசிரியர் "இன்று ஏகாதசி நல்ல தினம். இன்றே துவங்குவோம்" என்றபடி அன்றே பாடமும் ஆரம்பித்து விட்டார். அப்படி ஆரம்பித்து, ஒன்றரை வருடம் மிக பொறுமையாக சமஸ்கிருத இலக்கணமும் சேர்த்து, பாகவதம் சொல்லி கொடுத்து, பாராயணத்தையும் சுலபம் செய்து வைத்தார்.

70வயதாகும் தம்மால் இந்த வயதில் பாராயணம் செய்ய கற்றுக்கொண்டது ஸ்ரீஸ்வாமிஜியின் அருட்கடாக்ஷத்தினால்தான் என்று சொல்லி வியக்கிறார் ராஜகோபால். அவர் சொல்வது மெத்த சரியாகத்தான் இருக்கிறது அல்லவா! தஞ்சாவூரிலே ஸ்ரீராமகிருஷ்ணன் சாவித்ரி தம்பதியினர், ஸ்ரீமதி.கீதா, ஆகியோருடன் ஸ்ரீபரத், ஸ்ரீசிவராமகிருஷ்ணன் மற்றும் அன்பர்கள் முயற்சியில், குருநாதரின் அருளாசிகளுடன் 108க்கும் மேற்பட்ட மஹாமந்திர மையங்கள் செயல்பட்டு வருகின்றன. ராஜகோபால் அவர்களுக்கும் மஹாமந்திர கீர்த்தனத்தில் மிகுந்த ஈடுபாடு உண்டு. சத்குருநாதரின் ஸ்மரணத்தோடு, இந்த வாழ்வை கழித்து அவரையே அடைந்து, பிறவிப்பயனை அடைய பிரார்த்திக்கிறார் திரு.ராஜகோபால்.

---

செப்டம்பர் 27 முதல் டிசம்பர் 28 வரை ராமானுஜம்ஜி அமெரிக்காவிலும், அக்டோபர் 15-31 வரை பாக்யநாதன்ஜி ஆஸ்திரேலியாவிலும் சத்சங்கம் நிகழ்த்த உள்ளார்கள். மேலும் விவரங்களுக்கு - நாமத்வார் இணையதளம் **www.namadwaar.org**


Please Subcribe to Madhuramurali



# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் பதில்கள்

கேள்வி: எனக்கு சாஸ்திரங்களை நம்புவதை காட்டிலும், இறைவன் மீது நம்பிக்கை கொள்வதுதான் சுலபமாக உள்ளது!

பதில்: இறைவன் மீது நம்பிக்கை வைப்பதும், "இறைவன் உண்டு, அவனை திடமாக நம்பு" என சொல்லும் சாஸ்திரங்களின் மீது நம்பிக்கை வைப்பதும் ஒன்றுதான்.

கேள்வி: சத்சங்கத்திற்கு எண்ணற்ற அன்பர்கள் வருகின்றார்களே. சத்சங்கத்தினால், அவர்களுக்கு கிடைக்கும் பலன்தான் என்ன?

பதில்: பள்ளி ஒன்றில் பணிபுரியும் மிக சிறந்த ஆசிரியர் ஒருவர், தன்னிடம் பயிலும் மாணவர்கள் அனைவருக்கும், ஒரே விதமாகத்தான் கல்வி கற்பிப்பார். அவரிடம் பாரபட்சம் இருக்காது. பெரும்பாலான மாணவர்கள், ஒரு அளவிற்கு கற்று கொள்வர். ஒரு சிலர் அப்பாடத்தை கற்பது மட்டுமல்லாமல், மென்மேலும் தெரிந்து கொள்ள ஆர்வமுடன் ஆசிரியரை அணுகுவர். மாணவனின் ஆர்வத்தை பார்த்து, அவரும் **Syllabus**ஐ தாண்டி, பல நூல்களை மேற்கோள் காட்டி, "அவற்றையெல்லாம் படி" என்று அவனை ஊக்கப்படுத்துவார். அந்த மாணவனின் முன்னேற்றமும் பிற மாணவர்களை விட, அதிகமாகத்தானே இருக்கும்?

சத்சங்கத்திற்கு வரும் அனைவருக்கும் பலன் கிடைப்பது உறுதி. குருநாதரோ அனைவருக்கும், "நாமம் சொல், பாகவதம் படி" என்று ஒரேவிதமான பாரபட்சமற்ற உபதேசத்தைத்தான் செய்வார். சத்சங்கத்திற்கு வருவோரில் ஒரு சிலர்தான், அவற்றை மிக தீவிரமாக பின்பற்றுவர். உபதேசத்தை பின்பற்றுவதில் அவரவர்களின் முனைப்பு, முயற்சியை பொறுத்து, அந்தந்த அளவுக்கு ஆன்மீக முன்னேற்றமும் ஏற்படுகிறது.


Please Subcribe to Madhuramurali

கேள்வி: பிற ஆன்மீக சாதனைகளை போலல்லாமல், நாமகீர்த்தனம் என்பது, இறைவனின் கருணையை மட்டுமே ஆச்ரயிக்க கூடிய ஒரு வழிதானே?

பதில்: ஒருவருக்கு விதிவசத்தால், கடுமையான நோய் வருகிறது. அவர் அதிலிருந்து விடுபட ஒரு நல்ல ஜோதிடரை அணுகுகிறார். அந்த ஜோதிடரும் பல நல்ல பரிகாரங்களை சொல்கிறார். கோவில் தரிசனம், தீர்த்த யாத்திரை, அன்னதானம் என்று சிரமப்பட்டு பல பரிகாரங்களை அவரும் சிரத்தையாக செய்கிறார். இவருக்கு உரிய காலத்தில் பரிகாரத்திற்கு தக்க பலன் ஏற்படும். அதே கஷ்டத்திலிருக்கும் மற்றொருவரோ, இது போலெல்லாம் எந்த முயற்சியும் செய்யாமல், ஒரு உத்தம ஞானியை சரணடைந்து, அவரருளால் கஷ்டத்தை போக்கி கொள்கிறார். பரிகாரம் போன்ற பல முயற்சிகள் செய்வது, ஆன்மீக சாதனைகளை செய்வது போன்றது. இரண்டாமவர் செய்வதோ, இறைவனின் அருளை மட்டுமே நம்பி இருப்பது போன்றது.

நாமகீர்த்தனம் செய்கையில், "இதனால் என் பாபமெல்லம் கழிந்து நான் சித்தசுத்தியை அடைகிறேன்" என்ற மனோபாவத்துடன் செய்வோமானால், அது சாதனை போலாகி விடும். சாதனைக்கு தகுந்த பலன், நிச்சயமாக, உரிய காலகட்டத்தில் வரும். இது பரிகாரம் செய்வதை போன்றது.

ஆனால், அதே நாமகீர்த்தனம் செய்கையில் எல்லாம், இதுபோல் எவ்வித பலனையும் எதிர்பார்க்காமல் "இறைவா! உன் நாமம் இனிக்கிறது. உன்னருளால் உன் நாமம் சொல்கிறேன்" என்று மட்டுமே சந்தோஷமாக சொல்லி வந்தால், பகவான் வெகு விரைவிலேயே, தனது கருணையை பொழிந்து கஷ்டங்களை போக்கி, தன்னிடம் சேர்த்து கொள்கின்றான்.

கேள்வி: ஆன்மீக முன்னேற்றம் அடைய வேண்டும் என்ற ஆசையுடையவர்களில், சிலர் ஏமாறுகின்றனரே!

பதில்: தன் கையில் இருக்கும் செல்வத்தை அதிகரிக்க ஆசைப்படும் ஒருவர், அரசு அங்கீகரித்த நிறுவனங்களிலோ


Please Subcribe to Madhuramurali

அல்லது அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகளிலோ, தனது முதலீட்டை செய்கிறார் என வைத்துக்கொள்வோம். இந்த இடங்களில், இவருக்கு அதிக பலன் கிடைக்காது. முதலீடு செய்யப்பட்ட பணம் கொஞ்சம் கொஞ்சமாகத்தான் உயரும். முதலீடு வீணாகாது என்பதுதான் உத்திரவாதம். ஆனால் அதிக வட்டியை, குறைந்த காலத்தில் தருகிறேன் என்று வரும் நிதி நிறுவனங்களில் முதலீடு செய்பவர்கள், தாங்கள் போட்ட பணத்தையும் கூட இழந்து வருவதை, அன்றாடம் செய்திகளில் பார்க்கிறோம். இது மக்களின் பேராசையினால் வரும் துன்பம்.

ஆன்மீக முன்னேற்றம் அடைய வேண்டுமெனில், அதற்கு என்ன வழி என்பதை, நமது வேதங்களும், சாஸ்திரங்களும், மஹான்களும் தெளிவாக காண்பித்து உள்ளனர். அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட மார்க்கங்களில், நாம் செல்வோமானால், நாம் ஏமாற போவதே இல்லை.

ஆழ்வார்கள், நாயன்மார்கள், ஸ்ரீசைதன்யர், பக்த மீரா, ஸ்ரீதியாகராஜர், போதேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் போன்ற பல மஹான்கள், "இறைவனின் நாமம் சொல்; நிச்சயமாக அவனை அடைவது உறுதி" என்று உபதேசிக்கிறார்கள். நாளைக்கே பலன் கிடைக்கும் என்று தவறான எதிர்பார்ப்பு கொள்ளாமல், பொறுமையுடனும் சிரத்தையுடனும் நாமத்தை சொல்லி கொண்டிருந்தால், நிச்சயம், ஒருநாள் பலன் ஏற்பட்டே தீரும். இதில் எந்தவித பயமுமே இல்லை.

யாரோ ஒருவர், "ஓரிரு மாதங்களில் இதை அடையலாம், அதை அடையலாம், ஆத்மாவை பார்க்கலாம்" என்று சொல்லி, அதற்கு அவருக்கே தோன்றிய ஏதோ ஒரு வழியையும் காண்பிக்கிறார் என்று வைத்துக்கொள்வோம். எல்லா விஷயங்களிலும் அவசர பலனையே எதிர்பார்க்கும் மனப்பான்மை கொண்டு, அந்த வழிகளில் செல்பவர்கள் ஏமாந்து போகிறார்கள். குறுக்கு வழிகளில் சென்று, பெரிய பலனை குறுகிய காலத்தில் அடைய பேராசைப்படுவதே ஏமாறுவதற்கு காரணம்.


Please Subcribe to Madhuramurali

கேள்வி: குருவிடம் கைங்கரியத்தில் இருந்தாலும் எனக்கு எப்பொழுதும் என்னை முன்னிலைப்படுத்தி கொள்ள வேண்டும் எனும் எண்ணம் இருக்கிறது. என்ன செய்யலாம்?

பதில்: கடற்கரைக்கு சென்று பாருங்கள். அதன் நீள, அகலங்களையோ, ஆழத்தையோ புரிந்து கொள்ள முடியாமல் அது பரந்து ஆர்ப்பரிக்கிறது. வானத்தை அண்ணாந்து பாருங்கள். அது விரிந்து பரந்து செல்கிறது. அதற்கு எல்லை இல்லை. உங்களை சுற்றி பாருங்கள். எத்தனை மனிதர்கள். ஒரு கட்டிடத்தின் மாடிக்கு சென்று பாருங்கள். எவ்வளவு கட்டிடங்கள். எவ்வளவு மனிதர்கள். இப்படியே எவ்வளவு நகரங்கள், கிராமங்கள், மாநிலங்கள்; அவற்றில் எல்லாம் எவ்வளவு மனிதர்கள் இருப்பார்கள்? இப்படியே எத்தனை மாநிலங்கள்.

அப்படியே கொஞ்சம் மனதை விரித்து சிந்திப்போமானால், எவ்வளவு நாடுகள், பூமி போன்று எவ்வளவு கோள்கள், அந்த கோள்கள், நட்சத்திரங்களின் எண்ணிக்கைக்கும் அளவே இல்லை.

வானத்திற்கு ஒரு அளவை சொன்னாலும், அந்த வெட்ட வெளிக்கோ ஒரு எல்லையே இல்லை. இது மட்டுமா? நமக்கு முன்னால் நம் தாத்தா, பாட்டி இருந்தனர். அவர்களுக்கும் தாத்தா, பாட்டி இருந்தனரே? இப்படியே இந்த உலகில் எவ்வளவு பேர் இருந்தனர். இப்படி இந்த உலகம், எவ்வளவு காலமாக இருக்கிறது? இந்த காலத்திற்கு அளவு உண்டோ? வரப்போகும் காலத்திலும் எவ்வளவு மனிதர்கள் இருப்பர்?

இப்படிப்பட்ட இறைவனின் அபார சிருஷ்டியில், நாம் அல்பத்திலும் அல்பம். சொல்லப்போனால், கொசுவிற்கு ஒரு கொசு என்றாலும் மிகை இல்லை.

இந்த எண்ணத்தை நாம் அடிக்கடி மனதில் சொல்லி சொல்லி வளர்த்து கொண்டோமானால், நம்மிடம் இருக்கும் **attention seeking behaviour** குறைந்து, பலமிழக்கும்.


Please Subcribe to Madhuramurali



# பாகவத பழம்

## ஸ்கந்தம் 2, அத்யாயம் 1

–ஸ்ரீஸ்வாமிஜி

5



தியானத்தை பற்றி எடுத்து கூறிய சுகரிடம் பரீக்ஷித், "நீங்கள் மனதை ஒரே ரூபத்தில் நிற்கச் செய்ய வேண்டும் என்று கூறுகிறீர்கள். எந்த ரூபத்தில் அவ்வாறு நிறுத்த வேண்டும்? எப்படி மனதை அடக்கினால் எனக்கு சீக்கிரத்தில் சித்த சுத்தி ஏற்பட்டு பகவத் தரிசனம் ஏற்படும்?" என்று கேட்கின்றார். இதற்குப் பதில் கூறும் விதமாக ஸ்ரீசுகர், விராட்புருஷ தியானத்தை விளக்கமாகக் கூறுகிறார்.

ஜிதாஸநோ ஜிதச்வாஸோ ஜிதஸங்கோ ஜிதேந்த்ரிய:
ஸ்தூலே பகவதோ ரூபே மன: ஸந்தாரயேத் தியா 2:1:23

முதலில் ஆஸனத்தை ஸித்தி செய்து கொள்ள வேண்டும். ஆடாமல் அசையாமல், பல மணி நேரம் ஒரே இடத்தில் ஒரே மாதிரி உட்கார முடியவேண்டும். இதுவே ஆஸன ஸித்தி. அதேபோல் பிராணனையும் அடக்க வேண்டும். பூரக, கும்பக, ரேசகங்கள் போன்ற மூச்சுப் பயிற்சிகளை மேற்கொண்டு பிராண ஸஞ்சாரத்தையும் வசத்தில் கொண்டுவரவேண்டும். ஸங்கத்தையும் ஜெயிக்க வேண்டும். மனிதர்களிடமிருந்து விலகியிருப்பதால் மட்டும் ஸங்கத்தை ஜெயித்ததாகக் கூறமுடியாது. எந்த விதமான பொருளுடனும் பற்று வைக்காமல் இருக்க வேண்டும். புஸ்தகம், டி.வி போன்றவைகளைக் கூட விட்டுவிட்டு இருக்க வேண்டும். இதுவே 'ஜிதசங்கோ' என்பதன் பொருள். புலன்களையும் ஜெயிக்க வேண்டும். இப்படி இருந்துகொண்டு பாகவதம் கேட்டு நாமகீர்த்தனம் செய்தாலே சீக்கிரம் பகவானை பார்த்துவிடலாம். அல்லது தியானம் செய்ய விரும்பினால், இவையெல்லாம் செய்த பின் பகவானின் ஸ்தூல ரூபத்தில் மனதை நிறுத்த வேண்டும். இந்த தெரியக்கூடிய ஸ்தூல பிரபஞ்சம் பகவானின் திருமேனியே.


Please Subcribe to Madhuramurali

ஹ்ருதயத்தில் இருக்கும் அந்த பரமாத்மாதான் இந்த பிரபஞ்ச சிருஷ்டி, ஸ்திதி, லயத்திற்கு காரணம் என்று நினைவில் கொண்டு, உலக ரூபமாகவே இருக்கும் பகவானை தியானம் செய்ய வேண்டும். ஏழு ஆவரணங்களுடைய இந்த சரீரத்தில், உள்ளுக்குள் அந்தர்யாமியான பரமாத்மா வசிக்கிறான். அந்த பரமபுருஷன் ஹ்ருதயத்திலேயே இருக்கும் பொழுதிலும், நாம் அவனை உணர்வதில்லை. அதனால் அவன் அங்கு இருப்பதாக பாவித்துக்கொண்டு தியானம் செய்யவேண்டும் என்று கூறுகிறார். தியானத்திற்குறிய அந்த விராட் புருஷனின் விரிவான வர்ணணை செய்கின்றார் ஸ்ரீசுகர்.

பாதாளலோகமே அவனுடைய பாதங்கள். ரஸாதலம் எனும் லோகமே, அந்த விராட் புருஷனின் முன்னங்கால் மற்றும் பின்னங்கால் ஆகும். மஹாதலம் எனும் லோகமே கணுக்கால்கள். தலாதலமே அவனது இரண்டு முழங்கால்கள் ஆகும். ஸுதலம் எனும் லோகம் இரண்டு முட்டிகளாகவும், விதலம், அதலம் எனும் லோகங்கள் அவனுடைய தொடைகளாகவும், பூதலம் அந்த விராட் புருஷனின் இடுப்பாகவும், ஆகாயம் என்பது அவனுடைய நாபியிலிருக்கும் ஓட்டையாகவும் உள்ளன.

ஜ்யோதிகளுடைய கூட்டமாக இருக்கும் சுவர்க்கமே அவரது மார்பாகும். மஹர்லோகம் அவருடைய கழுத்தாகவும், ஜனலோகம் அவருடைய முகமாகவும் உள்ளன. தபோலோகமே அவரது நெற்றி. ஆயிரம் தலைகளுடைய அந்த விராட் புருஷனுக்கு ஸத்ய லோகமே தலையாக உள்ளது. இந்த்ராதி தேவர்களே அந்த விராட் புருஷனின் கைகளாக இருக்கின்றன. திசைகளே அவனது காதுகளாக உள்ளன. சப்தம் என்பதே அவனுடைய ச்ரோத்ரேந்த்ரியம் (கேட்கும் சக்தி). அஸ்வினி குமாரர்களே அவனுடைய மூக்கு. கந்தமே அவனுக்கு க்ராணேந்த்ரியம் (முகரும் சக்தி). அக்னியே அவனது வாய் ஆகும். அந்தரிக்ஷ லோகமே பகவானின் இரு கண்கள். சூரியனே பார்வையாக (சக்ஷுஸ்) இருக்கிறான். இரவு பகல் எனும் இரண்டும் அவனது இமைகள். பிரும்ம லோகம் அவனது புருவத்தின் மத்தியாக உள்ளது. ஜலம் அவனது இரு கன்னங்களாக உள்ளது. ரஸம் அவனுக்கு நாக்காக உள்ளது.

வேதங்களே பகவானுக்கு சிரஸ்ஸாக உள்ளது. யமனே


Please Subcribe to Madhuramurali

பகவானின் தெற்றிப்பல்லாக இருக்கிறான். மாயையே பகவானின் புன்னகையாக உள்ளது. அவரது கடைக்கண் பார்வை சிருஷ்டியை முடிவில்லாமல் செய்துகொண்டே போகிறது. வெட்கம் என்பது பகவானின் மேல் உதடு. லோபம் கீழ் உதடாக உள்ளது. தர்மமே பகவானுடைய ஸ்தனமாகவும், அதர்மம் பிருஷ்ட (பின்) பாகமாகவும் உள்ளன. பிரம்மதேவன் பகவானுடைய லிங்கபாகமாகவும், மித்ரவருணங்கள் வ்ருஷணங்களாகவும் உள்ளன. ஸமுத்ரமே அவனது வயிறாகாவும், மலைகளே அவனது எலும்புகளாவும் உள்ளன.

நதிகளே பகவானின் நாடிகள். மரங்களே அவனுடைய ரோமங்கள். அளவற்ற வீரியமுடைய காற்று பகவானுடைய மூச்சுக் காற்றாகவும், காலம் என்பதே அவனது நடையாகவும் உள்ளன. பிராணிகளுடைய சஞ்சாரம் அவருக்கு க்ரீடையாக உள்ளது. மேகங்களே பகவானுடைய கேசம். ஸந்த்யாகாலமே அவனுக்கு வஸ்த்ரமாகும். எல்லா விகாரங்களுக்கும் ஸ்தானமாக இருக்கும் சந்திரனே அவனது மனம். மஹத் எனும் தத்துவமே அவனது சித்தமாம்.

பரமேஸ்வரனே அவனது அந்த:கரணம். குதிரை, ஒட்டகம், யானை இவைகளெல்லாம் பகவானின் நகங்களாகும். எல்லா மிருகங்களும் பக்ஷிகளும் பகவானின் இடுப்பு பிரதேசத்தில் உள்ளன. பறவைகளே பகவானின் சிருஷ்டியின் ஸாமர்த்தியமாம். மனுவே பகவானுடைய புத்தி. மனிதனே பகவானின் ஆஸ்ரயமாக உள்ளான். கந்தர்வர்கள், வித்யாதரர்கள், சாரணர்கள் மற்றும் அப்ஸரஸ் அவனுடைய ஸ்வர ஸ்ம்ருதியாகவும், அஸுரர்கள் அவனுடைய வீர்யமாகவும் உள்ளனர். பிராமணன் பகவானின் முகமாகவும், க்ஷத்ரியர்கள் கைகளாகவும், வைச்யர்கள் தொடைகளாகவும், இதரர்கள் அவனுடைய பாதங்களாகவும் உள்ளனர். பலவிதமான யக்ஞ பொருட்களைக் கொண்டே அவனது இந்த சரீரம் ஜீவிக்கின்றது.

இவ்வாறெல்லாம் வர்ணித்தபோதிலும், இதுதான் ஈஸ்வரனுடைய ரூபம் என்று நிர்ணயித்து கூறிவிட முடியாது. ஆனால், இதுவே சாத்திரத்தில் கூறப்பட்டுள்ளதால் எடுத்து சொன்னேன்' என்று சுகர் கூறுகிறார்.

(கனியும்)


Please Subcribe to Madhuramurali

# தேரைக்கு உணவு




குருநாதரிடம் ஒரு பக்தர், "**கல்லினுள் தேரைக்கும் உணவு ஊட்டி உயிர் காக்கும் பரமதயாளன்**" என்று கடவுளை போற்றுகிறோம். ஆனால், வாழ்நாள் முழுவதும் உலக இன்பத்தை கண்டு களிக்காமல் உலகமே இன்னதென்று தெரியாமல் கல்லுக்குள் சிறைப்பட்டு கிடக்கும் தேரை, உயிர் வாழ்வதில் என்ன அர்த்தம்.? தேரை உள்ளே இருப்பதால் அந்த கல்லும் பயன்படாமல் தேரையும் பழிச்சொல்லுக்கு ஆளாகிறது. இப்படிப்பட்ட தேரைக்கு உணவு கொடுத்து உயிர் வாழ வைப்பது எப்படி தயாள குணமாகும்? என்று கேட்டார்.

குருநாதர் அதற்கு கூறிய விளக்கம் : ஒருவன் ஏதோ குற்றமிழைத்துவிடுகிறான். அவனை அரசாங்கம் சிறையிலடைக்கிறது. சிறையில் அவன் இருந்தாலும் அரசாங்கம் அவனுக்கு உணவு அளிக்க தவறுவதில்லை. ஏனென்றால், அவனுக்கு விதிக்கப்பட்டது சிறை தண்டனைதானே தவிர, கொலை தண்டனை அல்ல. அந்த சிறை தண்டனையை அவன் அனுபவிக்க வேண்டும் என்பதற்காக அவனுக்கு உணவு அளித்து உயிருடன் வைத்திருப்பதும் அரசின் பொறுப்பாகிறது.

கர்ம வினையினால் கல்லுக்குள் அடைபட்டு கிடக்கும் தேரையின் நிலையும் இதுதான். வினைப்பயனை அனுபவித்து அது விமோசனம் பெற வேண்டும் என்ற கருணையினால்தான், எப்படியோ அது உணவை பெற்று உயிர் வாழ செய்கிறார் கருணாமூர்த்தியான கடவுள்.

நன்றி :'ஞான ஒளி'- தபோவன வெளியீடு -ஆகஸ்டு 2013


Please Subcribe to Madhuramurali

Our Humble Pranams to the Lotus feet of
His Holiness Sri Sri Muralidhara Swamiji



Guruaram Consulting Private Ltd


Please Subcribe to Madhuramurali

# *மஹான்களின் பதில்!*

–ஸ்ரீபத்மபாதர்

யோகிராம்சுரத்குமார் அவர்கள், திருவண்ணாமலை சன்னதி தெருவில் உள்ள வீட்டில் தங்கியிருந்த காலம் அது. ஒரு தம்பதியினர், அவரை தரிசனம் செய்ய வந்திருந்தார்கள். கணவனைப் பற்றிய பல குறைகளை மனைவி, யோகிஜியிடம் அடுக்கிக் கொண்டே இருந்தாள். நடுநடுவே கணவன் மனைவியைப் பற்றிய குறைகளை கூற ஆரம்பித்தார். யோகிஜி பொறுமையாக சிரித்துக்கொண்டே கேட்டுக்கொண்டிருந்தார். "நீங்கள் இருவரும் சண்டை போட்டுக் கொண்டே சொன்னால், இந்த பிச்சைக்காரனால் (தன்னை எப்பொழுதும் அப்படித்தான் அவர் குறிப்பிட்டுக் கொள்வது வழக்கம்) கேட்க முடியாது. முதலில் மனைவி சொல்லி முடிக்கட்டும். பிறகு கணவருக்கும் வாய்ப்பு தரப்படும்" என்றார். இருவர் சொன்னதையும் கேட்டு முடித்தபிறகு, சிரித்துக்கொண்டே,

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல் வாழ்க்கை
பண்பும் பயனும் அது"

என்ற திருக்குறளை தானும் சொல்லி, பலமுறை அவர்களை மீண்டும் சொல்ல சொல்லிவிட்டு அனுப்பிவிட்டார்.

அவர்கள் திருவண்ணாமலை பேருந்து நிலையத்திற்கு செல்வதற்கு ஒரு வண்டியில் ஏறினார்கள்.

அந்த வண்டி ஓட்டுபவர் வேறு ஏதோ பேசிக்கொண்டே வந்தவர், திடீரென்று,

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல் வாழ்க்கை
பண்பும் பயனும் அது" என்றார்.

தம்பதிகளுக்கு தூக்கிவாரிப் போட்டது. அவர்கள் வண்டியிலிருந்து இறங்கி, தங்கள் ஊருக்கான பேருந்தில் ஏறி அமர்ந்தார்கள். ஒவ்வொரு அரசுப் பேருந்திலும் ஒரு திருக்குறள்


Please Subcribe to Madhuramurali

எழுதியிருக்கும் அல்லவா? அவர்கள் ஏறி அமர்ந்திருக்கும் பேருந்தில் எழுதியிருக்கும் திருக்குறள் அவர்கள் கண்களில் பட, அப்படியே ஆடிப்போய்விட்டார்கள். ஏன்? வேறென்ன..?

அன்பும் அறனும் உடைத்தாயின் இல் வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

அதே திருக்குறள்தான், அந்த பேருந்திலும் எழுதப்பட்டிருந்தது. அவர்கள் எங்கு சென்றாலும், இந்த திருக்குறள்தான் அவர்களைத் துரத்தித் துரத்தி வந்துகொண்டிருந்தது என்பதை சொல்லவும் வேண்டுமா? இத்தனைக்கும் யோகிராம்சுரத்குமார் அவர்கள், வட இந்தியாவிலேயே பிறந்து படித்து வளர்ந்தவர். அவர் தமிழின் பழம்பெரும் நூல்களை எப்படித்தான் தெரிந்துகொண்டாரோ, யாருக்குமே புரியாத வியப்பு அது.

இது ஒருபுறம் இருக்கட்டும். ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சிலர், யோகிராம்சுரத்குமார் அவர்களை, சன்னதி தெருவில் உள்ள வீட்டில் தரிசனம் செய்ய வந்திருந்தார்கள். அவர்கள் குடும்பத்தில் உள்ள ஒருவரின் ஆபத்தான சூழ்நிலையை எடுத்துச் சொல்லி, அவரை அதிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். அப்பொழுது தன் பக்கத்தில் இருந்த ராமாயண புத்தகத்தை அவர்கள் கையில் கொடுத்து அதைத் திறந்து படிக்கச் சொன்னார். அதில் சம்பாதி என்ற கழுகு, ராம நாமத்தின் பெருமையையும், மஹிமையையும் கேட்க கேட்க, அதற்கு இறக்கைகள் முளைத்த சம்பவத்தை வாசிக்கும் பக்கங்கள் இருந்தது.

"நாம் ஏதோ இவரிடம் கஷ்டத்தை சொல்ல வந்தோம். இவரோ நம் கையில் ஒரு ராமாயண புத்தகத்தை கொடுத்து படிக்க வைத்து விட்டாரே" என்ற சிந்தனையிலேயே இருந்தார்கள். அவர்களுக்கு ராமாயணம் படிப்பதில் கவனம் செல்லவில்லை. அவர்கள் படித்து முடித்த பிறகு பிரசாதம் கொடுத்து அனுப்பிவிட்டார்.

யோகி ராம்சுரத்குமாரின் பக்கத்தில் இருந்த ஒரு அன்பர் இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்தார். அவர், "என்ன


Please Subcribe to Madhuramurali

ஸ்வாமி, அவர்கள் தங்கள் குடும்பத்தில் உள்ள ஒருவர் பெரிய ஆபத்தில் இருப்பதாகச் சொன்னார்கள். தாங்கள் அதற்கு ஒன்றும் பதில் கூறாமல் அனுப்பி விட்டீர்களே" என்று கேட்டார். அதைக் கேட்ட யோகிராம்சுரத்குமார், "இல்லை, நான் பதில் கூறிவிட்டேனே" என்றார். "புரியவில்லையே" என்று பக்கத்தில் இருப்பவர் கேட்டார்.

"ராமாயணத்தை அவர்களை படிக்கச் சொன்னேன். ராம நாமத்தின் பெருமையால் சம்பாதி இழந்த சிறகுகளைப் பெறுவது என்பது, மிகவும் அற்புதமான ஒன்று. அதுபோல் இவர்களும் விடாமல், தீவிரமாக, நம்பிக்கையுடன் ராம நாமம் சொல்லி வருவார்களேயானால் வந்திருக்கும் பெரும் ஆபத்திலிருந்து மீண்டு விடுவார் என்பதுதான் பதில்" என்றார்.

மஹான்கள், நாம் கேட்கும் கேள்விகளுக்கு, நேரிடையாக பதில் சொல்லாமல் இருக்கலாம். அவர்கள் சொல்லும் பதில், பல வழிகளில் அமையும். அதை நாம் கவனமாக இருந்து அவர்களுடைய அருளால், கிரஹித்துக் கொள்ள வேண்டும்.

rb rajmani builders
launches its new project
"rajmani's mathura"
at kolapakkam (near Porur)
well designed and ventilated 2/3 bhk homes
(825 sq. ft to 1075 sq. ft) at fair prices
ph: 98400 30711 email: rajmanibuilders@gmail.com
ADVT
website: www.rajmanibuilders.com


Please Subcribe to Madhuramurali

# ஸ்வாமி ராமகிருஷ்ணானந்தர் - 9

சென்னை ராமகிருஷ்ணா மடம் - ராமகிருஷ்ணானந்தரின் 150வது ஜெயந்தி விழா ஜூலை 15, 2012 அன்று ஸ்ரீஸ்வாமிஜி ஆற்றிய உரை

---

சசியும் சரத்தும், தூய வாழ்க்கை வாழ தகுதி பெற்றவர்கள் என்பதை, தனது பிரதம தரிசனத்திலேயே கண்டு கொண்டவர் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர்.

அவரிடம் சேரும்பொழுது அவரது சீடர்கள் எல்லோருக்கும் மிக மிக சிறு வயதுதான். ஆனால், அவர்கள் அனைவரை பற்றியும் "ம"விடம் ராமகிருஷ்ணர் சொன்னது அனைத்தும் இம்மி பிசகாமல், அப்படியே உண்மை ஆயிற்று. இவை, ஆச்சரியத்தை வரவழைக்காமல் இல்லை. சசியும், சரத்தும் ஜீசஸ்கிறிஸ்துவிடம் சம்பந்தம் பெற்றவர்கள் என்பதினால்தான், முதலிலேயே அவர்களிடம் பைபிளை கொடுத்து, படிக்க சொன்னார் ராமகிருஷ்ணர்.

ராமகிருஷ்ணானந்தரை பார்த்து ராமகிருஷ்ணர், "நீ அருவ கடவுளை நம்புகிறாயா அல்லது உருவ கடவுளை நம்புகிறாயா" என்று கேட்டார். சசி சற்றும் தயங்காமல், "முதலில் கடவுள் இருக்கிறாரா இல்லையா என்பதையே, என்னால் நம்ப முடியவில்லை. அப்புறம்தான், அவர் உருவமற்றவரா இல்லையா என்பதை பற்றி பேசுவது" என்றார். இதை ராமகிருஷ்ணர் எதிர்த்து பேசுவதாக கொள்ளவில்லை. காரணமும் அதற்கு இருந்தது.

சிறுவயதிலிருந்து, ஒரேவிதமான பழக்க வழக்கங்களில் ஈடுபட்டு, அதையே செய்து வரும் ஒருவன், அதையே ஜன்மம் முழுக்க செய்து, உயிர் துறப்பான். அப்பேர்ப்பட்டவனிடம் மாற்றம் எதுவும் வராது. ஆனால், எவன் ஒருவனுக்கு உலக வாழ்க்கை குறித்து கேள்வி பிறக்கிறதோ, அவன்தான், அதற்கு விடையும் கண்டுபிடிக்கிறான். இதற்கு உதாரணங்களை எளிதில் சொல்லலாம்.

புத்தருக்கு வயோதிகம், மூப்பு, மரணம் ஆகியவற்றை பார்த்து பயம் வந்தது. "இது எனக்கும் வருமே இதில் இருந்து


Please Subcribe to Madhuramurali

எப்படி தப்பிப்பது" என்று விடை தேடினார். அதற்கு விடையும் கண்டுபிடித்தார். திருச்சுழியில் வாழ்ந்த ரமணரை அவர் தந்தையின் மரணம், வெகுவாய் பாதித்தது. எல்லோர் வீட்டிலும்தான் மரணம் நிகழ்கிறது; இவருக்கு மட்டும் ஏன் பெரிய பாதிப்பு ஏற்பட்டு, ஒரு கேள்வி வந்தது? "இறந்த தந்தை எங்கே சென்றார்" என்று கேட்டார். உறவினர்கள் சொன்ன எந்த பதிலும், அவருக்கு திருப்தி அளிக்கவில்லை. மதுரையில், வீட்டு மாடியில் சென்று, படுத்து கொண்டார். பாகவதத்தில் வரும் கட்வாங்கர் போன்று, ஒரு க்ஷணத்தில், இந்திரிய சலனங்களை ஒடுக்கி, ஹிருதயஸ்தானத்தில் ஆத்ம தரிசனம் பெற்றார். ஆக, கேள்வி யாருக்கு வருகிறதோ, யாருக்கு சம்ஸாரத்தை கண்டு பயம் வருகிறதோ, அவர்களுக்கு பகவானின் கிருபை இருக்கிறது என்று சொல்லலாம். விஷ்ணு சஹஸ்ர நாமத்திலும், பகவானுக்கு "பயக்ருத் பயநாசன:" என்று பெயர் உண்டு. இதற்கு, "பயத்தை கொடுப்பவனும் அவனே; பயத்தை நாசம் செய்பவனும் அவனே" என்று அர்த்தம். சசிக்கு இருந்த கடவுளை பற்றிய தேடலால்தான், அவர் "முதலில் கடவுள் இருக்கிறாரா இல்லையா என்பதையே, என்னால் நம்ப முடியவில்லை .." என பதில் அளித்தார் என, ராமகிருஷ்ணர் நினைத்தார். அப்படிப்பட்டவனுக்குத்தானே கடவுளின் கிருபை கிடைக்கும்.

ராமகிருஷ்ணர் சசியிடம், "நீ நரேனிடம் அடிக்கடி பழகு" என்று சொன்னார். சசி, ராக்கால், நரேன் ஆகியோரிடம் இருந்த நட்பும் அலாதியானது. அதனால்தான் சசியும் கூட, நரேன், "நீ தென்னாட்டிற்கு போ" என்று சொன்னவுடன், மறு பேச்சு பேசாமல், சென்னைக்கு கிளம்பி வந்தார். தக்ஷிணேஸ்வரத்திலிருந்து ஒருமுறை இம்மூவரும் கிளம்பினர். முதலில் சசியை வீட்டில் விடலாம் என்று சென்றனர். அங்கு சென்றவுடன், அப்புறம் நரேன் வீட்டிற்கு சென்று அவரை விடலாம் என்று கிளம்பினர். அங்கு சென்ற பின்னரோ, ராக்கால் வீட்டிற்கு போய், அவரை விட்டு வரலாம் என்று தோன்றியது. காரணம், மூவருக்கும் பிரிய மனமே இல்லை. இறுதியாக, ஒரு பார்க் பெஞ்சில், இரவு முழுக்க குருதேவரை பற்றி, பேசி பேசி, காலம் கழித்தனர்.

குருதேவர் சொல்லும் ஒவ்வொரு விஷயத்தையும் கவனமாக முழுமையாக ஏற்பார் சசி. (தொடரும்)


Please Subcribe to Madhuramurali

# மலேசியாவில் காகித மலர்கள் புத்தக வெளியீடு

செப்டம்பர் 1 அன்று, மலேசிய இந்து சங்கத்தின் சிலாங்கூர் மாநில பேரவை நடத்திய, மிக பெரிய விழாவில் "காகித மலர்கள்" புத்தகம் வெளியிடப்பட்டது. இந்த புத்தகம், ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருளுரைகளின் அடிப்படையில், இந்து தர்மத்தை குறித்து எளிதாக எடுத்து சொல்லும் வகையில், அமைந்துள்ளது. இவ்விழாவில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அந்தரங்க செயலாளர் Dr.பாக்யநாதன் கலந்து கொண்டு, சிறப்புரை ஆற்றினார். பதிவு செய்யப்பட்ட, ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் வீடியோ அருளுரையும், விழாவிற்கு வந்திருந்த ஆயிரக்கணக்கான அன்பர்களுக்கு காண்பிக்கப்பட்டது.

மலேசிய **Batu Caves** இல் நடந்த இவ்விழாவில் திருமுறை ஓதும் விழாவும் நடைபெற்றது. மலேசிய இந்து சங்க தேசிய தலைவர் டத்தோ ஸ்ரீமோகன்ஷான், பொது செயலாளர் ஸ்ரீகணேஷ்பாபுராவ் மற்றும் எக்ஸிகியூடிவ் கமிட்டி உறுப்பினர் ஸ்ரீகணபதிராவ் ஆகியோர் இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். மலேசிய செய்தித்தாள், தொலைக்காட்சி ஆகியவற்றில் இச்செய்தி நன்றாக பிரசுரமும் ஒளிபரப்பும் ஆகி இருந்தது. இப்புத்தகத்தின் ஆயிரக்கணக்கான பிரதிகள், சிலாங்கூர் தமிழ் பள்ளிகளில் படிக்கும் இந்து மாணவர்கள் படித்து பயன் பெற, இலவசமாக தரப்பட்டது.

மலேசிய நாமத்வாரின் 2வது வருட பூர்த்தி ஆகஸ்டு 31, செப் 1 தேதிகளில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. ஆக31 அன்று ஷா அலாம் பகுதியில், சமூகத்தில் பின்தங்கியவர்களுக்காக ஒரு இலவச மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. பிரபல மருத்துவர்கள் கலந்து கொண்டு பல சிறப்பு பரிசோதனைகளையும் ஆலோசனைகளையும் வழங்கினர். மலேசிய நாமத்வாரை சேர்ந்த சுனிதாஜி மற்றும் அன்பர்கள், இதை, நன்கு ஒருங்கிணைத்து நடத்தினர்.

இந்த ஆண்டு விழாவை ஒட்டி, செப்டம்பர் 1 அன்று மலேசிய நாமத்வாரில் பாக்யநாதன்ஜி அவர்கள் சிறப்புரை ஒன்று ஆற்றினார். கோபகுடீர குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்று இருந்தது.


Please Subcribe to Madhuramurali

ஸ்ரீஹரி:

**மஹாரண்யம் ஸ்ரீ கல்யாணஸ்ரீனிவாச பெருமாள் ஸந்நிதி**

மதுரபுரி. மஹாரண்யம் கிராமம்

**புரட்டாசி கடைசி சனிக்கிழமை**

**அன்னகூட உத்ஸவம் மற்றும் கூட்டு பிரார்த்தனை**

நாள்: 12.10.2013 நேரம் காலை: 8.30மணி

விபரங்களுக்கு - 9025025042/ 044-37104183

---

1. செப்டம்பர் **22-30** வரை முரளிஜி கடலூர் நாமத்வாரில், திரளான அன்பர்கள் முன், "**சுந்தர காண்டம்**" உபன்யாசம் செய்தார்.
2. அக்டோபர் **16-31** வரை - சத்சங்க அன்பர்கள் ஸ்ரீமதி கல்பனா ஐயர் தலைமையில் "**பஞ்சத்வாரகா, மாத்ரு கயா, புஷ்கர் யாத்திரை**" மேற்கொள்ள இருக்கிறார்கள். தொடர்புக்கு -ஸ்ரீமதி கல்பனா ஐயர் - 09789927202
3. அக்டோபர் 24-31 வரையிலுமாக குருவாயூரில் "**ஸ்ரீமத் பாகவத உபன்யாசமும் பாராயணமும்**" பூர்ணிமாஜி சத்சங்க அன்பர்கள் முன்னிலையில் நிகழ்த்த உள்ளார். தொடர்புக்கு திரு.வெங்கடேசன் - 09448614890

---

**தூத்துக்குடி "புராநவா 2013"**

தென்தமிழகத்தின் 5 மாவட்டங்களின் சுமார் 90 பள்ளிகளை சேர்ந்த மாணவமணிகள் ஒன்பது மண்டலங்களாக பிரிந்து கலந்துகொண்ட புராநவா புதிர் போட்டியின் இறுதி சுற்று தூத்துக்குடி நாமத்வாரில் செப்டம்பர் 7 அன்று நடைபெற்றது. தூத்துக்குடி புஷ்பலதா பள்ளி முதல் பரிசை வென்றது. திரு.சக்திவேல் - Sterlite, திரு.தினேஷ் வைத்யநாதன் - Dinamalar, திரு.வேல்முருகன் - GRT Regency, முரளிஜி - GOD India Trust ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக பங்குகொண்டு பரிசுகளை வழங்கினர். ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருளாசிகளுடன், தூத்துக்குடி நாமத்வார் அன்பர்கள், போட்டியை, மிக அழகாக ஒருங்கிணைத்து நடத்தினர்.


Please Subcribe to Madhuramurali

## சனாதனப்புதிர் பகுதி 56 - கேள்விகள் - ஆத்ரேயன்

1. ஏகானங்கா - இவர் யார்?
2. ஸ்ரீருத்ரத்திற்கு யாருடைய உரைகள் புத்தக வடிவில் கிடைக்கிறது?
3. சிவனுடைய சிரசை பார்த்தாக ப்ரும்மா கூறியபொழுது அவருக்கு பொய்சாட்சி சொன்னது யார்?
4. சிவனிடம் இருக்கும் ருத்ர வீணையின் விசேஷம் என்ன?
5. வால்மீகி சிவனுடைய வில்லை எப்படி வர்ணிக்கிறார்?
6. சிவ சஹஸ்ர நாமத்தில் அ,ந,ப,ம,வ,ச இந்த எழுத்துக்களில் ஆரம்பிக்கும் எண்ணிக்கை எவ்வளவு?
7. மஹாபாரதம் அனுசாஸன பர்வாவில் வரும் சிவசஹஸ்ர நாமத்தில் நான்கு முறை வரும் பெயர்கள்(நாமங்கள்) எவை?
8. ப்ரும்மா ஸ்கந்தனுக்கு நான்கு பார்ஷதர்களை கொடுத்தார். அவர்கள் யார்?
9. கிருதா என்ற ரிஷியின் உணவு என்ன?
10. க்ருதாசி- அப்சரஸ், மகரிஷி ப்ரமதீ - இவர்களின் குழந்தை பெயர் என்ன?

## விடைகள்

1. யசோதையின் புதல்வி; க்ருஷ்ணரின் சகோதரி - சபா பர்வம்.
2. ஸாயனாசாரியர் - வேத பாஷ்ய உரை; அபிநவ சங்கர்; பட்டபாஸ்கர்; விஷ்ணுசூரி.
3. காமதேனு
4. இரண்டு சுரைக்காய் கட்டிய வீணை. தும்பீல த்வய யுக்தா வீணா யஸ்ய । சைவ ருத்ர வீணேதி லோகே ப்ரஸித்தா॥
5. பகவானிவ சங்க்ருத்தோ பவோ வேதமயம் தனும் - ருத்ரனுடைய வில் வேத மயமானது.
6. அ - 87, ந -59, ப -65, ம - 121, வ - 98, ஸ - 161.
7. கால: 153, 370, 384, 533; விபு: 145, 203, 635, 696; ஹரி: 208, 377, 712, 787
8. நந்திசேன், லோஹிதாக்ஷன், கண்டாகர்ணன், குமதமாலி
9. நெய் மட்டும்
10. "ருரு"


Please Subcribe to Madhuramurali

# *பாலகர்களுக்கு ஒரு கதை*



## *உடையும் விருந்தும்!*

மகேந்திரன், தயாள குணம் கொண்ட ஒரு சிறந்த மன்னன். அவனது அரண்மனைக்கு அருகாமையில், சின்னான் என்ற ஏழை ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் பிச்சை எடுத்து, கிடைப்பதை உண்டு காலத்தை போக்கினான். அவன், அழுக்கான உடை ஒன்றையே உடுத்தி வந்தான்.

அரண்மனை வாசலில், ஒருமுறை ஒரு அறிவிப்பு பலகை தொங்கியது. அதில் "மன்னர் அரண்மனையில் நாளை இரவு ஒரு சிறப்பு விருந்து வழங்க போகிறார். ராஜ உடையில் வரும், எந்த குடிமகனும் அதில் கலந்து கொள்ளலாம்" என்று இருந்தது. இதை பார்த்த சின்னானுக்கு, அதில் கலந்து கொள்ள வேண்டும் என்ற பெரிய ஆசை வந்தது. ஆனால் அவன் அணியும் ஆடையை பார்த்தால், அவனுக்கே அருவருப்பாக இருக்கிறதே? ஆனாலும், அவன் மனம் விருந்திற்கு ஆசைப்பட்டது. அதனால் என்ன செய்வது என்று யோசித்து, நீண்ட யோசனைக்கு பின் ஒரு முடிவுக்கு வந்தான். அதை நினைத்தால், அவன் உள்ளம் தடுமாறியது; பயந்தது. இருப்பினும், தைரியத்தை வரவழைத்து கொண்டு, ஒரு முடிவுடன், அரண்மனை நுழைவாயிலுக்கு சென்று காவலாளியிடம் "நான் மன்னரை பார்க்க வேண்டும்" என்றான்.

எளிய கனிந்த சுபாவம் கொண்ட மன்னன் மகேந்திரன், யாரை வேண்டுமானாலும் பார்ப்பான். காவலாளி உள்ளே சென்று, மன்னனிடம் அனுமதி பெற்று வந்து, சின்னானை உள்ளே அனுப்பினான். உள்ளே மன்னன் சிம்மாசனத்தில் வீற்றிருந்தான். சின்னானை பார்த்து "என்னப்பா, என்னை பார்க்க வேண்டும் என்றாயாமே? என்ன வேண்டும்?" என்றான்.

சின்னான் குரலை உயர்த்தி, "மன்னா! நீங்கள் தரும் விருந்துக்கு வர விரும்புகிறேன். ஆனால் என்னிடம் ராஜ உடைகள் இல்லை. உங்களது உடைகளில் ஒன்றை தந்தால், நானும் அதில் கலந்து கொள்ள முடியும்" என்றான்.


Please Subcribe to Madhuramurali

சின்னான் இதை பேசுவதற்குள், உடம்பை எட்டு முறை மடித்து விட்டான். அவ்வளவு நடுக்கம். அதை கேட்டவர்களோ, கொல்லென்று சிரித்து விட்டனர். ஆனால் மகேந்திர மன்னன் கனிவுடன் சிரித்து, சின்னானை பார்த்து, "நீ என்னிடமே வந்து கேட்க முடிவு எடுத்தது நல்லது" என்று சொல்லி இளவரசனை அழைத்து "இவனை உனது அறைக்கு அழைத்து சென்று, உனது ஆடைகளில் ஒன்றை அணிவிக்க கொடு" என்றான்.

இளவரசனும் அப்படியே சின்னானை அழைத்து சென்று, அணிவித்தான். சின்னானுக்கு, தன்னை கண்ணாடியில் பார்க்கையில் நம்பவே முடியவில்லை. ஆள் பாதி ஆடை பாதி என்கிறார்களே! அவனுக்கே, இப்பொழுது கொஞ்சம் கம்பீரம் இருப்பது போல், தெரிந்தது. அவன் கனவிலும் யோசித்து பார்க்க முடியாத உடைகளில், இப்பொழுது அவன் இருந்தான். இளவரசன் சின்னானை பார்த்து "மிக உயர்ந்த இதை அணிந்து நீ விருந்துக்கு வரலாம். இதை நீ திருப்பி தர தேவை இல்லை. இவை உனக்குத்தான். நீ எப்பொழுதும் இதை அணிந்து கொண்டு இருக்கலாம்" என்றான்.

சின்னான் அஞ்சலி செய்து, கைகூப்பி நன்றியுடன் இளவரசனை வணங்கினான். அவன் கண்களின் ஓரத்தில், நீர் கசிந்தது. ஆனால், உடனேயே அவன் மனம் தடுமாறியது. எதையோ யோசித்தவனாய், அவன் தன் பழைய ஆடைகளை பார்த்தான். அது மூலையில் குப்பையாக இருந்தது. அவனுக்கு "ஒருக்கால் இந்த ஆடைகளை திருப்பி தர நேர்ந்தால் ....?" என்று தோன்றியது. மேலும் உயர்ந்த ஆடைகளை அணிந்து கொண்டிருக்கின்றானே ஒழிய, அவனுக்கு அந்த பழைய ஆடைகளை, அவை அழுக்கானவைகள் என்றாலும், பிரிய மனமில்லை. அவ்வளவுதான். அந்த எண்ணமும், பிரியா உணர்வும் வந்தவுடன், அவன் ஒரு குதி குதித்து, தன் பழைய ஆடைகளை வாரி சுருட்டி, எடுத்து கொண்டான். இளவரசன் ஒன்றும் சொல்லவில்லை.

சின்னான் விருந்தில் கலந்து கொண்டான். ஆனால் அவனது ஒரு கையில், பழைய ஆடைகளை சுருட்டி பிடித்து இருந்தான். அதை அவன் விடவே இல்லை. அதனால், அவனால் மன்னன் அளித்த அந்த அற்புதமான விருந்தை, நன்றாக


Please Subcribe to Madhuramurali

அனுபவிக்க முடியவில்லை. மேலும் பல சுவையான பதார்த்தங்களை உண்ணவே மறந்து விட்டான். அவனது பாதி கவனம், அவனது பழைய ஆடையிலேயே இருந்தது.

ஆனால் இளவரசன் சொன்னது போலவே, உடைகள் தரமானவையாக உயர்ந்ததாக இருந்தன. அவை, சின்னானது காலம் முழுவதும் உழைத்தன. ஆனாலும், சின்னான் தன் பழைய துணிகளை விடவே இல்லை. அதை, குப்பையாக வைத்து கொண்டே இருந்தான். உயர்ந்த ஆடைகளை அணிந்திருக்கும் ஒருவன், இப்படி, கையில் அழுக்கு உடைகளுடன், சுற்றுகிறானே என்று அவனை பார்ப்பவர்கள் நினைப்பர். அப்படி அவன் வாழ்ந்தான். அவனுக்கு வயோதிகம் வந்தது. அப்பொழுதும் அவன் அருகில் அந்த குப்பை துணிகள் இருந்தன. அப்பொழுதுதான், சின்னான், தான் செய்த தவற்றை உணர்ந்தான். தனது பழைய துணிகள், தனக்கு எந்த வித உதவியையும் செய்யவில்லை என்றும், அது அவனுக்கு ஒரு பாரமாகவே இருந்திருக்கின்றன என்றும் உணர்ந்தான். அவை இல்லாமல், அவன் ஒரு நல்ல வாழ்க்கை வாழ்ந்திருக்கலாம் என புரிந்தது. தனது முட்டாள்தனத்தை எண்ணி வருந்தினான். அப்பொழுது, அங்கு மன்னன் எதேச்சையாக வந்தான். சின்னானை பார்த்து, "இப்பொழுதாவது புரிந்ததா?" என்று கேட்டு, புன்முறுவல் பூத்து, சின்னானின் பழைய உடைகளை எடுத்து, வெளியே எறிந்தான்! சின்னானும் அதை பார்த்து சந்தோஷப்பட்டான்!

பாலகர்களே! நாம் இறைவனிடம் நம்பிக்கை கொள்கையில் நமது கவலைகள், குற்ற உணர்வுகள், பழைய தோல்விகள் ஆகியவற்றை எல்லாம், தூக்கி எறிந்து விட வேண்டும். சின்னான் போல, அவற்றை உடன் வைத்து கொள்ள கூடாது. இறைவன் மேல் நமக்கு முழு நம்பிக்கை வருமானால், அவர் நம்மை முற்றிலும் பார்த்து கொள்வார். உயர்ந்த ஆடைகளின் மேல், சின்னான் சந்தேகப்பட்டது போல் இருக்க கூடாது.

இறைவன் அமைத்து கொடுக்கும் வாழ்க்கை, அற்புதமாக இல்லாமல் வேறு எப்படி இருக்கும்? வாழ்க்கையின் ஒவ்வொரு தருணமும், அவர் நமக்கு தரும் புதுப்புது வாய்ப்புகள். அவற்றை சரியாக எடுத்து கொண்டு, பழையவற்றை மறந்து, நம்பிக்கையுடன் வாழ்ந்து, வெற்றி பெறுவோமாக!


Please Subcribe to Madhuramurali




**Dr. Shriraam Mahadevan**

MD (Int Med), DM (Endocrinology)
Consultant in Endocrinology and Diabetes
Regn. No 62256

**ENDOCRINE & SPECIALITY CLINIC**

New 27/1, Old 11/1, (Gr.Floor), 4th Cross Street,
R.K.Nagar, Mandaveli, Chennai - 600 028.
(Next to Krishnamachari Yogamandiram)
Tel: 2495 0090Mob: 94458 80090
E-mail: mshriraam@gmail.com,www.chennaiendocrine.com
www.chennaiendocrine.com


Please Subcribe to Madhuramurali

## சத்சங்க செய்திகள்

**ஆகஸ்டு 28 – செப்டம்பர் 6** – மதுரபுரி ஆஸ்ரமத்தில் **ஸ்ரீமாதுரீ ஸகீ ஸமேத ஸ்ரீப்ரேமிகவரதனின் 20வது ப்ரும்மோத்ஸவம்** மிக கோலாஹலத்துடன் நடைபெற்றது. தினமும் பாகவத பாராயணம், புறப்பாடு, பூஜை, தீர்த்த பிரசாதம், பாகவத பிரவசனம், மாலை புறப்பாடு, திவ்யநாமம், டோலோத்ஸவம் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் முன்னிலையில் நடைபெற்றது. ஸ்ரீப்ரேமிகவரதனுக்கு கோவிந்த பட்டாபிஷேகம் மலை அடிவாரத்தில் செய்யப்பட்டது. பூர்த்தி நாளன்று, ஸ்வாமி ரதோத்ஸவம் கண்டருளினார். வெகு ஜோரான புஷ்ப அலங்காரத்திலும், வித வித வாஹனங்களிலும் ஸ்வாமிக்கு புறப்பாடும் பூஜையும் இருந்ததை, அன்பர்கள் கண்டு களித்தனர். வந்திருந்த திரளான அன்பர்களுக்கு, விமரிசையாக அனைத்து நாட்களும் பிரசாதம் வழங்கப்பட்டது. இடைவிடாத சத்சங்கத்தில், தினமும் ஏராளமான அன்பர்கள் வந்து கலந்துகொண்டு, குருவருளையும் திருவருளையும் பெற்று சென்றனர்.

**செப்டம்பர் 8, 9** – கடலூர் மஞ்சக்குப்பம் பிள்ளையார் கோவில் கும்பாபிஷேகத்தில் கலந்துகொண்டு அருளுரை வழங்கினார்கள்.

**செப்டம்பர் 16** – சிராவண துவாதசி – ஸ்ரீவாமன ஜெயந்தி அன்று மாலை, ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் ப்ரேமிகபவனத்தில் திரிவிக்ரமாவதாரம் குறித்து அருளுரை வழங்கினார்கள்.

**செப்டம்பர் 21** – ஓசூர் அருகே, கர்நாடகாவில் சம்பகெரே கிராமத்தில் காலை 6 முதல் மாலை 6 வரை நடந்த, அகண்ட நாமசங்கீர்த்தனத்தின் பூர்த்தியில் கலந்துகொண்டு, ஸ்ரீஸ்வாமிஜி அனுக்ரஹ பாஷணம் செய்தருளினார்கள்.

**செப்டம்பர் 7 - 12** தேதிகளில், முரளிஜி தூத்துக்குடி நாமத்வாரில் ஆழ்வார்களின் அனுபவம் குறித்தும், செப் 13-15 தேதிகளில் பெரியகுளம் நாமத்வாரில் குருமஹிமை குறித்தும், உபன்யாசம் செய்தார். செப்டம்பர் 16 அன்று, பெரியகுளம் வாசவி மஹாலில், ஒரு மஹாமந்திர கூட்டு பிரார்த்தனையை நிகழ்த்தினார். திரளான அன்பர்கள் வந்து கலந்துகொண்டனர்.


Please Subcribe to Madhuramurali

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்



*- ஜனனி*

## ஸ்ரீஹம்ஸதாஸ் பாபாஜி மற்றும் ஸ்ரீகோபாலீபாயி -10

ஆரோக்கியமாக இருக்கும்பொழுது யாரிடமிருந்தும், எவ்வித ஸேவையையும் ஏற்பதில்லை என்று இருந்தார் பண்டித் பாபா. க்ருபாஸிந்துதாஸ் தர்மஸங்கடத்தில் ஆழ்ந்தார். கோபால்தாஸ்பாபாவின் ஆக்ஞையின்படி நடப்பதா அல்லது, பண்டித பாபாவின் ஆக்ஞையின்படி நடப்பதா?

பண்டித பாபாவின் ஸேவையில், அவரது மனம் பெருமளவில் ஈடுபட்டதால், அவர், பண்டித பாபாவின் சொல்லை மீறவே எண்ணினார். பண்டித பாபா, மீண்டும் அவரிடம், சென்று விடும்படி கூறிய பொழுது, அவர், "உங்கள் ஆக்ஞையை பாலனம் செய்ய வேண்டும் என்ற நிர்பந்தம் எனக்கில்லை, ஏனென்றால் நான் உங்கள் சீடனில்லை. அதனால் நான் இங்கிருந்து செல்லமாட்டேன். நான் உங்களிடமிருந்து வித்யை கற்கவே வந்தேன். ஊர் மக்கள் என்னிடம், நீ பண்டித பாபாவிடம் என்ன கற்றாய்? என்று கேட்டால், நான் என்ன கூறுவேன்? துடிப்போடு யாராவது உன்னிடம் வந்தால், அவர்களை அவமதித்து இங்கிருந்து சென்றுவிடு என்று கூறவேண்டும் என்பதையே, நான் பண்டித பாபாவிடம் கற்றேன் என்றே, நான், அவர்களுக்கு பதில் கூறவேண்டும். உண்மையில், உங்களிடமிருந்து நான் கற்றது எதிர்பாராத்தன்மையே! ஆகையால், எதையும் எதிர்ப்பாராமல், நான் இங்கேயே இருப்பேன். உங்கள் ஆணையை மீறுவேன்" என்று கூறி முடித்தார்.

பண்டித பாபா இதைக் கேட்டு ஸந்தோஷப்பட்டார். க்ருபாஸிந்துதாஸ் பாபாவை, தன்னிடமே தங்குவதற்கு அனுமதியும் அளித்துவிட்டார். இது முதல் க்ருபாஸிந்துதாஸ் பாபாவின் வாழ்க்கையில், ஒரு புதுமையான ஸ்வர்ணமயமான அத்யாயம் ஆரம்பமாயிற்று. பண்டித பாபாவிற்கு குரு என்ற பாவனையுடன் ஸேவை செய்வதே அவரது பஜனையின் முக்கியமான அங்கமாயிற்று. அவர் என்ன என்ன முன்னேற்றம்


Please Subcribe to Madhuramurali

அடைந்தாரோ, அவையெல்லாம் பண்டித பாபாவிற்கு அவர் செய்த ஸேவையின் பலனே. இது ஸம்பந்தமாக, ஒரு ப்ரத்யக்ஷமான ஸம்பவத்தை இங்கே கூறுவது உசிதமாகும்.

நித்யம், பண்டித பாபாவிற்கு, பூஜைக்கு தேவையான புஷ்பங்கள் மற்றும் இதர ஸாமக்ரியைகளை ஏற்பாடு செய்வது க்ருபாஸிந்துதாஸ் பாபாவின் பொறுப்பு. ஒரு நாள் பூஜை வேளைக்கு முன்பாகவே க்ருபாஸிந்துதாஸ் பாபா மடி தவறிவிட்டது. அதனால் மீண்டும் ஸ்நானம் செய்யும்படி ஆகிவிட்டது. இதனால் சரியான நேரத்தில், அவரால் பூஜைக்கான புஷ்பங்களை எடுத்து வர முடியவில்லை. பூஜை வேளை நெருங்கிவிட்டது. இப்பொழுது என்ன செய்வேன்? என்று மிகவும் கவலை கொண்டார். அப்பொழுது ஒரு அழகிய கன்னிகை அங்கு வந்து பாபாவிடம், ஒரு கூடை நிறைய புஷ்பங்களை தந்துவிட்டு சென்றுவிட்டாள். பின் ஒரு நாள், க்ருபாஸிந்துதாஸ் பாபா இச் சம்பவத்தை பண்டித பாபாவிடம் கூறுகையில், பண்டிதபாபா, "உன்னுடைய பாவம் ஸித்தியாகிவிட்டது. இதை யாரிடமும் கூறாதே" என்று கூறினார். கன்னிகையின் ஸ்வரூபத்தில், தனது ஸித்த ஸ்வரூபத்தையே க்ருபாஸிந்துதாஸ் பாபா தரிசித்தார் என்பதையே, பண்டிதபாபா சூசகமாக கூறினார். எந்த ஸேவை அவரால் அன்று செய்ய முடியவில்லையோ, அதை அன்று அவரது ஸித்த ஸ்வரூபமே செய்துவிட்டது.

பண்டிதபாபாவின் ஆக்ஞையின் பேரில் க்ருபாஸிந்துதாஸ் பாபா, ஸ்ரீ கோவிந்த லீலாம்ருதம் எனும் க்ரந்தத்தை மனப்பாடம் செய்து, அவர் காண்பித்த முறையில், லீலா ஸ்மரணமும் செய்து வந்தார். கோவிந்த லீலாம்ருதத்தில் இருக்கும் வர்ணனைகளை ஒட்டி, அஷ்டயாம லீலைகள் ஸம்பந்தமான பல லீலா ஸ்தலங்கள் மற்றும் குஞ்சங்களின் சித்திரங்களை வரைந்திருந்தார். இதை பெரும் பொக்கிஷமாக கருதி, அவர், தான் செல்லும் இடத்திற்கு எல்லாம், அதை ஒரு டின் டப்பாவில் சுருட்டி வைத்து கொண்டு, எடுத்துச் செல்வார். பல ஸாதகர்கள், அவரிடம், லீலா ஸ்மரண விஷயமான சிக்ஷையை பெற வருவார்கள். இந்த சித்திரங்களின் மூலமாக, அவர்களுக்கு, பாபா உபதேசம் செய்வார். இதனால் ஸாதகர்களுக்கு, லீலா ஸ்மரணத்தில், விசேஷமான ஈடுபாடு ஏற்பட்டது.

(தொடரும்)


Please Subcribe to Madhuramurali

# *மாலே மணிவண்ணா – 121*

–மகாவித்துவான்
மயிலம். வே. சிவசுப்பிரமணியன்




மேலே பரிபாடல் திருமாலிருஞ்சோலை மலையை ஏத்துகிறது.

*தாம் வீழ் காமம் வித்துபு விளைக்கும்*
*நாமத்தன்மை நன்கனம் படி எழ*
*யாமத்தன்மை இவ்வையிருங்குன்றத்து*

திருமாலிருஞ்சோலை எனும் நாமத்தினது பெருந்தன்மை நன்றாக பூமியின் கண் பரக்க, மகளிரும் ஆடவரும், தாம் விரும்புகிற காமத்தை விதைத்து விளைவித்து இன்ப பயன் கொள்ளுதலை உடைய, இந்த அழகிய பெரிய மலை என்பது இதன் விளக்கம்.

நாமத்தன்மை - பெயரின் பெருஞ்சிறப்பு, படி - உலகம், யாமத்தன்மை - நள்ளிரவு. யாமம் அகத்திணையுள் ஐந்திணையுள் ஒன்றாகிய குறிஞ்சித்திணைக்குறிய சிறுபொழுது. குறிஞ்சித்திணைக்குறிய உரிப்பொருள் புணர்தல் ஆகும். மைந்தரும் மகளிரும், மலை நிலமாகிய குறிஞ்சியில் நள்ளிரவில் கூடிக்களித்து, சிற்றின்பத்தை அனுபவித்தலால், இம்மலை தமிழ்ப்பொருள் இலக்கணத்துக்கு இலக்கியமாய் புகழ்ந்து பேச பெறுகிறது. உலகெலாம் மலையின் புகழ் பரத்தற்கு இதுவும் ஒரு காரணம்.

(இவ் ஐ அரும் குன்றத்து - இந்த அழகிய பெரிய மலையில்) குறிஞ்சித்திணைக்குக்கூதிர் காலம் பெரும்பொழுது - யாமமாகிய நள்ளிரவு சிறுபொழுது, மலைநில ஒழுக்கம், களவொழுக்கத்திற்கு சிறப்பானது.

இக்கருத்தையே பரிபாடல், திருப்பரங்குன்றமாகிய மலையை சிறப்பிக்கும்பொழுதும் சொல்லியுள்ளதை இங்கு பொருந்தி காண்க.


Please Subcribe to Madhuramurali

*தள்ளா பொருள் இயல்பின் தண்தமிழ் ஆய் வந்திலார்*

*கொள்ளார் இக்குன்று பயன் (பரிபாடல் 9-25-26)*

இன்றும் இளமகளிரும் மைந்தரும் திருமணமானபிறகு தேனிலவுக்கு மலை நிலங்களை நாடி சேறல் கண்கூடு. இப்பழந்தமிழ் வழக்கம், அகப்பொருட்சிறப்பினை எடுத்துக் காட்டி, உலகம் எல்லாம் இம்மலையைப் புகழ செய்கிறது என்பது கருத்தாகும். இம்மலையை மேலும் புகழ்கின்றார்.

*மன் புனல் இளவெயில் வளாவ இருள் வளர் வெனைப்*

*பொன்புனை உடுக்கையோன் புணர்ந்து அமர் நிலையே*

*நினைமின் மாந்தீர் கேண்மின் கமழ்சீர்*

(புனல் நீர். நீர்போல குளிர்ச்சியுடைய இளவெயிலுக்கு அடைமொழி - வளாவ-சூழ, அதனுள்ளே இருள் வளர்தல் போல - மன் - நிலைபெற்ற) நிலைபெற்ற குளிர்ச்சியை உடைய இளவெயில் சூழ (சுற்ற) அதன் நடுவில் இருள் வளர்ந்தாற்போல, பீதாம்பரத்தை (பொன்னாடை) உடைய திருமால் தன் அண்ணனோடு கூடி அமர்ந்திருக்கிற அழகான காட்சியை, மக்களே நினையுங்கள்; அந்த மலையின் சிறப்பை கேளுங்கள் என்கிறார்.

இளவெயிலுக்குள் இருள்போல, பீதாம்பரத்துள் கரிய திருமேனி உடைய கண்ணன் காட்சி உள்ளது. பொன்னாடைக்கு இளவெயிலை சொன்னார். மாலாகிய கண்ணன், தன் முன்னோனாகிய பலராமனோடு அமர்ந்துள்ள காட்சியை நினையுங்கள். அந்நினைவுடனே, இம்மலையின் புகழை சொல்ல கேளுங்கள் என்று நம்மை அழைக்கிறார். (தொடரும்)

**மத்திய கிழக்காசிய நாடுகளில் சத்சங்கம்** – ராமானுஜம்ஜி மத்திய கிழக்காசிய நாடுகளில் செப்டம்பரில் 7நாட்கள் ஸ்ரீமத் பாகவத சத்சங்கத்தை நிகழ்த்தினார். காலையில் பாகவத பாராயணமும் மாலையில் வ்ருத்ராசுர சதுஸ்லோகி உபன்யாசமும் இடம்பெற்றிருந்தது. திரளான அன்பர்கள் வந்து சிரவணம் செய்தனர்.


Please Subcribe to Madhuramurali

# அப்பாலுக்கு அப்பால்



## சில சங்கடங்கள்!

பசவரின் புகழ் வளர்ந்து கொண்டே போனது பலருக்கு பிடிக்கவில்லை. ஏதாவது ஒரு விதத்தில், தொல்லை கொடுத்து கொண்டே வந்தனர். பசவர் செய்வது வேத விரோதம் என்று சொல்லி பார்த்தனர். பிஜ்ஜால மன்னன், பண்டிதர்களுடன், பசவரை வாதாட வைத்து பார்த்தான். பண்டிதர்களின் கேள்விகளுக்கு, பசவர் பதில்களை வேதசம்மதமாய் தருவதை பார்த்து பிஜ்ஜாலன் ஆச்சரியம் அடைந்தான். மறுபடி மறுபடி பசவரின் பதில்கள் ஆணித்தரமாய் இருப்பதை பார்த்து, இப்படி ஒரு சபை கூட்ட வேண்டிய அவசியமே இல்லை என்று முடிவுக்கு வந்தான்.

பசவரின் மடத்திலிருந்து திருடுவதற்கு முயற்சி செய்தனர். பசவரின் அடியார்கள் ஏராளமானவர்களானபடியால், அதுவும் திட்டமிட்டபடி நடக்கவில்லை. பசவரின் நேரடி தலையீடு இல்லாமல், எல்லாம் மிக சரியாகவே நடந்தது.

பசவருக்கு எதிராக, எதையாவது செய்தே ஆக வேண்டும் என்ற நிர்ப்பந்தத்திற்கு தள்ளப்பட்டு இருந்தனர் அவரது எதிரிகள். அதனால் அவர் அரசாங்க பணத்தை எடுத்து செலவழிக்கிறார் என்று, பிஜ்ஜாலனின் காதில் கசிய வைத்தனர். பிஜ்ஜாலன் கண்டு கொள்ளவே இல்லை. ஆனால், தினம் ஒரு லக்ஷம் சரணர்கள் சாப்பிடுகிறார்கள் என்று அவன் காதில் விழுந்தவுடன், அவனுக்கு கொஞ்சம் மூளை பிசகியது. அவன் பசவரை நேரடியாக கேட்க தயங்கினான். பசவரின் நேர்மை மேல், அவனுக்கு அவ்வளவு நம்பிக்கை. இருப்பினும், மன்னன் என்ற வகையில், அதை தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் இருந்தது.

இதற்கு காத்திருந்தவர்கள், கருவூல வருமான செலவு பதிவேடுகளில் தவறான எண்ணிக்கைகளை காண்பித்து கருவூல நிதி குறைந்தாற் போல் காண்பித்தனர். சோதித்து


Please Subcribe to Madhuramurali

பார்க்கையில், கணக்கு எழுதியவர் குற்றம் என்று தெரிய வந்தது. இப்படி பசவரை எதிர்த்து எதை செய்தாலும், அது பசவரின் புகழை வளர்த்து கொண்டே வந்தது.

ஆனாலும் அவருக்கு தொல்லை கொடுத்து கொண்டே இருந்தனர். பசவருடன் இருந்தவர்கள், அதற்கு தக்க பதிலடி தர வேண்டும் என்று சொன்னாலும், பசவர் பொறுமை காக்குமாறே சொல்லி வந்தார். அல்லமர் வேறு இச்சமயங்களில் உடன் இருந்ததால், பசவரின் மனது இது குறித்து கொஞ்சமாவது கவலைப்படவில்லை.

இவற்றை பொருட்படுத்தாமல் பக்தர்களின் சத்சங்கம் அனுபவ மண்டபத்தில், அல்லமரின் முன் தொடர்ந்து நடந்தவாறு இருந்தது. ஒருநாள் சென்னபசவர் "பிரபு! சித்தாராமர் பெரிய யோகியாக இருந்தாலும், எல்லோரையும் போல் லிங்கத்தை கழுத்தில் அணியவில்லையே?" என்று கேட்டார். அவர் குரலில் குறை தெரிந்தது. அல்லமர் சட்டென "அது சரி! நதியையே குதித்து தாண்ட தெரிந்தவனுக்கு எதற்கப்பா ஓடம்? வானத்தில் பறக்க தெரிந்தவனுக்கு எதற்கப்பா ஏணி? சித்தாராமர் போன்றவர்களுக்கு எதுவும் தேவை இல்லை" என்றார். அன்பர்களின் முகம் எல்லாம் சுருங்கியது. பிரபு சித்தாராமரை பார்த்தார்.

அவர் "பிரபு! நீங்கள் சொல்வதை முழுவதும் நான் ஆமோதிக்கிறேன். லிங்கம் வெறும் அடையாளம்தானே?" என்றார். பிரபு "ஆமாம், ஆமாம். நீ சொல்வது சரி. இருப்பினும் பசவர் என்ன சொல்கிறார் என்று பார்ப்போம்" என்றார். பசவர் "பிரபு! சமூகத்தில் வேண்டுமானால், இது நம்மை வித்யாசப்படுத்தி காட்ட அடையாளமாக பயன்படலாம். ஆனால் இது வெறும் அடையாளம் மட்டுமல்ல. சகலத்தையும் கடந்து இருக்கும் இறைவனை வழிபடுவதற்கு, லிங்க ரூபம் அவசியமே. இந்த தர்க்கத்தை ஆரம்பித்தது சென்னபசவன் என்பதால், அவனும் நீங்களுமே இதற்கு விடை தர வேண்டும்" என்றார்.

அல்லமர் கேள்விக்குறியாக சென்ன பசவரை பார்த்தார். சித்தாராமர் வெற்றி பெற்றவர் போல் நின்றிருந்தார்.

(தொடரும்)


Please Subcribe to Madhuramurali

"மதுரமுரளி" ஆண்டு சந்தா ரூ 120
For Details: **+91-44-24895875**

"மதுரமுரளி" மாத இதழ் சந்தா அனுப்ப முகவரி:

Guruji Sri Muralidhara Swamigal Mission, 51, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83 .
**D.D.** in name of **Guruji Sri Muralidhara Swamigal Mission** / நேரில் ரொக்கம் / மணியார்டர் (**D.D /M.O/Cash)** மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

கொரியரில் பெற விரும்புவோர் கொரியர் செலவை தனியாக செலுத்தி பெறலாம்.

***ஏற்கனவே சந்தாதாரராக இருப்பவர்கள் தங்களது சந்தாவை புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.***


* Publisher : S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission


* Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the publisher of Madhuramurali.
* Views expressed in articles are those of the respective Authors and do not reflect the views of the Magazine.
* Advertisements in Madhuramurali are invited.


**ஸ்ரீஸ்வாமிஜியின் நிகழ்ச்சிகள்**

| | |
|---|---|
| ஏகாதசி | அக்டோபர் 1, 15 நவம்பர் 13 |
| அக் 5 - 13 | மதுரபுரி - நவராத்திரி உற்சவம் |
| அக்டோபர் 4 | பாரதிதாசன் காலனி புவனேஸ்வரி அம்மன் கோவில் |
| அக் 13 | ப்ரேமிகபவன ஸ்ரீநிவாசபெருமாள் அவதார தினம் |
| அக் 16-22 | பெங்களூர் ஜெயநகரில் பிரவசனம் 09845022033 |

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை
Dr.A.BHAGYANATHAN, Personal Secretary to
**HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**
New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.
Tel. : +9144-2489 5875, Email : contact@namadwaar.org என்னும் முகவரிக்கு அனுப்பவும்.



Please Subcribe to Madhuramurali